பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 06 சனிக்கிழமை (22.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 26

# குடாநாட்டு மக்களின் பீதியான வாழ்வை நீக்காவிடில் அரசு திக்குத்தடுமாற நேரிடும்

## அங்கிலிக்கன் பேராயர் சுட்டிக்காட்டுகிறார்

யாழ்ப்பணம், டிசெம்பர். 22

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் மக்கள், கொலைகள், காணாமல் போதல், கப்பம் கேட்டுப் பயமுறுத்தல் ஆகிய சம்பவங்கள் அங்கு அதிகரித்து வருவதால் பீதி நிறைந்து வாழ்கிறார்கள்.

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாடு முழுமையாக இருக்கும்வேளையில் இவை நடப்பதை விளங்கிக்கொள்வது கடினமாக உள்ளது.

இவற்றை நிறுத்த முடியாத பட்சத்தில் யாழ். குடாநாட்டு மக்கள் மேலும் பிரிக்கப்பட்டு சட்ட மின்மை காணும் வேளை, அதனால் இலங்கை அரசு திக்குத்தடுமாற நேரிடும்.



- இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கிறார் இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர், உயர் அருள் பணி டுலிப் டி சிக்கேரா.

யாழ். குடாநாட்டு நிலைமை குறித்து நேற்று விடுத்த அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

யாழ்ப்பாண மக்கள் முகங்கொடுக்கும் சோதனைகளும், வேதனைகளும் கடந்த சில மாதங்களாக மேலும் அதிகரித்துள்ளன. இப்போது அங்கு வசிப்பவர்கள் தொலைபேசி அழைப்புகளினூடாக அச்சுறுத்தப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்டு கருணா மீது விசாரணை ஆரம்பம்

லண்டன், டிசெ.22

பிரிட்டனில் குடிவரவு குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட கருணா தற்போது யுத்தக் குற்றங்களுக்காக விசாரிக்கப்பட்டு வருகிறார் என அங்கிருந்து வெளியாகும் 'த டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சித்திரவதை பணயக்கைதிகளைப் பிடித்தல் போன்ற யுத்தகாலக் குற்றங்களுக்காக கருணாவை சுவதேச சட்டங்களின் கீழ் விசாரணை செய்வதற்கு போதுமான சாட்சியங்கள் உள்ளனவா என்றும் ஆராயப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இவ்வாறான விசாரணைகள் எவையும் இலங்கை அரசுக்கும் பிரிட்டனுக்கும் இடையில் கசப்புணர்வை உண்டுபண்ணும் என்றும் அவரது குழு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுமக்களைக் கடத்திச் சென்று அவர்களிடம் ஆயுதம் திணிப்பு

### கிழக்கு நிலை குறித்துக் கண்காணிப்புக்குழு

கொழுமப்பு,டிச. 22

அம்பாறை மாவட்டத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணைக் குழுவினர் இளைஞர்களைக் கடத்திச்சென்று அவர்களிடம் ஆயுதங்களைத் திணிக்கின்றனர் - என்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு குற்றம்சாட்டியுள்ளது.

கண்காணிப்புக் குழுவின் வாராந்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அம்பாறை திருக்கோவில் பகுதியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## திங்கள், செவ்வாய் இரவு ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், டிச. 22

நத்தார்ப் பண்டிகையை ஒட்டி மக்கள் இரவு ஆராதனைகளில் பங்குபற்ற வசதியாக எதிர்வரும் 24ஆம் 25 ஆம் திகதிகளில் யாழ்.குடாநாட்டில் இரவு நேர ஊரடங்கு முற்றாக நீக்கப்படவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு இத்தகவலை வெளியிட்டது.

குடாநாட்டில் இப்போது இரவு 9 மணி முதல் மறுநாள் அதிகாலை 4.30 மணி வரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண மட்ட அதிகாரப் பகிர்வுக்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்

### 13 ஆவது திருத்தத்தை விட முன்னேற்றகரம் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்



கொழும்பு, டிசம்பர் 22

மாகாண மட்டத்திலான அதிகாரப் பகிர்வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்திருக்கின்றார் என்று ஈ.பி.டி.பி.கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கின்றார்.

வெளிநாட்டு செய்தியாளர்கள் குழு ஒன்றுக்கு கொழும்பில் வைத்து வழங்கிய செவ்வியில் அமைச்சர் இதனை கூறினார்.

அந்தச் செவ்வியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகாரப்பகிர்வு அலகாக மாகாணத்தினை ஏற்றுக்கொள்வதற்கு இணங்கியுள்ளார்.

புதிய அதிகாரப் பகிர்வு யோசனைகள் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்தவரை பொலிஸார் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

யாழ்ப்பாணம், டிச. 22

உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றத்தில் சரணடைந்து யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த ஒருவரை, விசாரணை மேற்கொள்வதற்கு நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். பிறவுண் வீதியைச் சேர்ந்த ஒருவர், உயிர் அச்சுறுத்தல் காரணமாக யாழ். நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார். அவர் யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தார்.

சம்பந்தப்பட்டவரை விசாரணை செய்ய அனுதிக்க வேண்டும் என்று பொலிஸார் நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர். நீதிமன்றம் அதற்கு அனுமதி வழங்கியது.

மீண்டும் இந்த நபர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வழக்கம்பரையில் நேற்று மாலை முன்னாள் வேட்பாளர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், டிச. 22

தொல்புரம் மேற்கு, வழக்கம்பரையில் நேற்று மாலை 5.45 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த பேபி என்றழைக்கப்படும் முத்துகுமாரு சிவபாலன் (வயது - 30) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

அவரது வீட்டுக்கு நேற்றுமாலை சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகள் அவரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மழை ஓய்ந்தது

யாழ்ப்பாணம், டிசெ. 22

குடாநாட்டில் கடந்த ஐந்து நாள்களாகத் தொடர்ந்து பெய்த மழை, நேற்று ஓய்ந்தது. ஆங்காங்கே சில இடங்களில் தூறல் மழை இருந்தது.

வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த தாழமுக்கம் நேற்று விலகியதை அடுத்தே சீரற்றிருந்த காலநிலை முடிவுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதிகளிலும் மற்றும் தாழ் நிலங்களிலும் நின்ற வெள்ளம் நேற்று வடியத் தொடங்கியது. இடம் பெயர்ந்து கோவில்களிலும், பாடசாலைகளிலும் தங்கியிருந்த மக்களில் பலரும் நேற்றுத் தமது வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் யாப்பாவின் கருத்துக்கு ஊடக அமைப்புகள் கவலை

கொழுமப்பு,டிச. 22

தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படும் பொதுசன ஊடகவியலாளர் அடையாள அட்டைகளை வைத்திருப்போர் மாத்திரமே ஊடகவியலாளர்கள் எனவும், அதன்படி கடந்த வருடத்தில் ஊடகவியலாளர் ஒருவர் மாத்திரமே கொலை செய்யப்பட்டிருக்கிறார் எனவும் பொதுசன ஊடக அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா நேற்று முன்தினம் கூறியமை தொடர்பாக ஐந்து ஊடக அமைப்புகள் ஒன்றிணைந்து கவலை வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக ஐந்து ஊடக அமைப்புகள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உதயன் பத்திரிகையில் சேவையாற்றிய செல்வராஜா ரஜிவர்மன் 2007 ஏப்ரல் 29 ஆம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## துடுப்பாட்ட மத்தியஸ்தர்கள் தெரிவுக்கு நாளை தேர்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வும் செயல்முறைத் தேர்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

சங்கத்தின் மத்தியஸ்தர்கள் குழுவினரால் இந்தத் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன. (1)

## நாயன்மார்கட்டில் மருத்துவமுகாம்

யு என் ஹபிற்றாட் நிறுவன அனுசரணையுடன் யாழ்.அரிமாக் கழகம் நடத்தும் இலவச மருத்துவ முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பு, நாயன்மார்கட்டு ஜே/109 கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு நடத்தப்படவுள்ளது.

நாயன்மார்கட்டு சமுர்த்தி வங்கிக் கட்டடத்தில் இந்த முகாம் இடம்பெறும்.

மருத்துவ பரிசோதனை, இலவச மருந்து விநியோகம் ஆகியவற்றுடன் 50 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும். இந்தப் பிரதேச மக்களை கலந்து பயன்பெறுமாறு யு என் ஹபிற்றாட் நிறுவனம் கேட்டுள்ளது. (1)

## திருவாசக முற்றோதல்

தென் புலோலி உபய கதிர்காமம் தான்தோன்றி ஈஸ்வரர் சக்கர சண்முக ஆழ்வார் கோயிலில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் இடம்பெறும். காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இம் முற்றோதல் மாலை 6 மணிக்கு நிறைவுபெறும். (1-160)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*2007 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்*



செல்வி
குமரேஸ்வரநாதன் நிலக்ஷி
யா/இந்து ஆரம்ப பாடசாலை



செல்வி
விக்னேஸ்வரன் மதுரங்கா
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

*ஆகிய இருவருக்கும் மனதார உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதுடன் அவர்களை வழிப்படுத்திய அதிபர்கள், ஆசிரியர்களையும் மற்றும் பெற்றோரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.*

*இப்பரீட்சையில் சித்தியெய்திய சகலரும் தொடர்ந்து கல்வியில் முன்னேற வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றோம்.*

**மாமாமார், அத்தைமார், அண்ணன்மார், அக்காமார்.**


ALLIANCE FRANCAISE DE JAFFNA
83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com

**Learn French the French Way**

**பிரெஞ்சு மொழி வகுப்புகள்**
**புதிய பிரிவு**

நீங்கள் பிரெஞ்சு மொழியைக் கற்க ஆவலாக உள்ளீர்களா? மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில் புரிவோர், ஆர்வமுள்ளோர் (இம்முறை O/L பரீட்சையில் தோற்றியோருக்கும்) அனைவருக்குமான புதிய வகுப்புகள் 29.12.2007 சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டம் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் உதவியுடன் நடைபெறுகின்றது.

பதிவுகளை இன்றிலிருந்து மேற்கொள்ளலாம். கட்டணம் மற்றும் ஏனைய விவரங்களை நேரில் அல்லது தொலைபேசியின் ஊடாகக் கேட்டறியலாம்.

(கற்பதற்கு ஆங்கில அறிவு அவசியமில்லை) (69233)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**இராசு வரதராஜா**
(முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் பாதுகாப்பு உத்தியோகத்தர்)

தோற்றம்
12.08.1944

மறைவு
22.11.2007

கடந்த 22.11.2007 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்கள், ஆறாத்துயரிலிருந்த எமக்கு நேரிலும் தொலைபேசி மற்றும் தந்தி மூலம் ஆறுதல் கூறியர்களுக்கும் பத்திரிகை மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் ஊடாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளைய அஞ்சலி செலுத்திய வர்கள், மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தியவர்கள் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று(22.12.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*றோஸ்பிரான்ட் முன்பாக,*
*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.*

(69225)

*நீங்கா நினைவுடன்*
**குடும்பத்தினர்.**

## யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை அதிபர் திருமதி மாலினிதேவி வேதநாதன் அவர்களின் சேவை நலன் பாராட்டு



**திருமதி மாலினிதேவி-வேதநாதன்**
**B.A. (Hons), S.L.P.S. 2-I**

ஆசிரியராக : 25.10.1971 - 31.05.1989
அதிபராக : 01.06.1989 - 22.12.2007

*இப்பாடசாலையின் நிறுவுநருக்கு அடுத்தாற்போல் பாடசாலைக் கல்விக் கண்ணைத் திறந்த பெருமை இவரையே சாரும். இவரது ஓய்வுகாலம் சிறப்புற அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**யா/கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலை.**

(69216)

## மரியன்னை ஆலயத்தில் இன்று ஒளிவிழா

யாழ். மரியன்னை பேராலய மறைக் கல்வி மாணவர்களின் ஒளிவிழாநிகழ்வு இன்று சனிகிழமை பி.ப.3 மணிக்கு அகவொளி குடும் பநல நிலையத்தில் நடைபெறவுள் ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக ஆயர் இல்ல நிதிப் பொறுப்பாளர் அருட்திரு ஜே. பி. அன்ரனிதாஸ் அடிகள் கலந்துகொள்வார். (1-226)

## மனைப் பொருளியல் செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ். வலயப் பாடசாலைகளில் மனைப்பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரம் 11 புதிய பாடத்திட்டம்தொடர்பான செயலமர்வு, இன்றும் நாளையும் காலை8 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில்அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (1-202)

## மரண அறிவித்தல்

### திருமதி குமாரரத்தினம் சின்னம்மா



வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரரத்தினம் சின்னம்மா 18.12.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம்- சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரரத்தினத்தின் அன்பு மனைவியும், கருணானந்தசிவம் (கனடா), மணி மேகலாதேவி (ஆஸ்திரேலியா), சற்குணதேவி (கனடா), ஸ்ரீதரன், வரதலட்சுமி, ராகுலன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகந்தாதேவி(கனடா), சுந்தரமூர்த்தி (ஆஸ்திரேலியா), பத்மநாதன்(கனடா), லலிதாதேவி, அருள்தாஸ் (ஆசிரியர், யா/கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம்), பிரியாளினி(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசம்மா, காலஞ்சென்ற இராசையா (முன்னாள் முகாமையாளர்,மலாயன்கபே, யாழ்ப்பாணம்), மங்கையர்க்கரசி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அனிதா, ஜினிதா, கருணராஜ் (கனடா), சுதர்சன், சுஜித்தா, சுபிதா (ஆஸ்திரேலியா), விமலி, மைதிலி, விமலராஜன்(கனடா), சிவசொரூபன், சிவதர்சன், சிவசந்திரிகா, சிவரஞ்சிதன், ரகுராஜ், ரகுபிரசாந்த் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*51, கோணாவளை வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
*021-4590245.*

(69228)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**


## Computer Courses

New batches start on :

Batch I : 05.01.2008 Batch II : 14.01.2008 Batch III : 23.01.2008



Success Through Knowledge...

- Diploma in Software Engineering
- Diploma in Web Designing
- Diploma in Hardware Engineering
- Diploma in Office Applications
- Diploma in Computerized Accounting



**IIS CITY CAMPUS**
200, Sivan Pannai Road, Jaffna
(வைத்தீஸ்வரா சந்திக்கு அருகில்)
Tel: 222 8060 Fax: 222 6933
Web: www.iiscitycampus.net


## மக்கள் வங்கியின் முகாமையாளர் பரீட்சை இன்று யாழ்ப்பாணத்தில்

வலிவடக்கு, டிசெ.22

மக்கள் வங்கியின் தரம் 3 - III இற்கு பதவியேற்றலுக்கான எழுத்துமூலப் போட்டிப்பரீட்சை இன்று கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இடம்பெறுகின்றது.

விண்ணப்பதாரருக்கு உரிய அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களை பெற விரும்புவோர்கள் 011-2785230 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற முடியும் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

(202-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி டெஸ்ட்டை பயமுறுத்துகிறது மழை

## தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து போராட்டம்



காலி, டிச. 22

காலியில் இடம்பெற்றுவரும் இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியை மழை தொடர்ந்து குழப்பி வருகின்றது. நேற்றைய நாள் ஆட்டத்தின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி மழை காரணமாகப் பாதிக்கப்பட்டது. நேற்று சுமார் 30 ஓவர்கள் வரையே வீசப்பட்டிருந்த நிலையில் - நண்பகல் வேளையில் ஆட்டம் மழையால் தடைப்பட்டது. அப்போது இங்கிலாந்து ஒரு விக்கெட் இழப்புக்கு 102 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்தும் மழை பெய்தமையால் நேற்றைய ஆட்டத்தை மேற்கொண்டு நடத்த முடியாமல் போனது.

இப்போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 499 ஓட்டங்களையும், இங்கிலாந்து 81 ஓட்டங்களையும் எடுத்திருந்தன. 418 ஓட்டங்களால் பின்தங்கிய நிலையில் 2ஆம் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து 3ஆம் நாள் ஆட்டநேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 2 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று 4ஆம் நாள் ஆட்டம் நடந்தது. சிறப்பாக ஆடிய வோகன் - அலஸ்ரியர் குக் ஜோடி முதல் விக்கெட்டுக்காக 67 ஓட்டங்களைச் சேர்த்தது. இந்நிலையில் வோகன் (24), வெலிகெதரவின் வேகத்தில் மஹேலவிடம் பிடிகொடுத்து வெளியேறினார். தொடர்ந்து இணைந்த குக் - பெல் ஜோடி சிறப்பாக ஆடிவருகின்றது.

மழை காரணமாக நேற்றைய ஆட்டம் நிறுத்தப்படும்போது இங்கிலாந்து ஒரு விக்கெட் இழப்புக்கு 102 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குக் 53 ஓட்டங்களுடனும் இயன் பெல் 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்று கடைசி நாள் ஆட்டம் நடைபெறும்.

## சச்சின் ஓட்டங்கள் குவிப்பார் - வோர்ன்

மெல்போர்ன், டிச 21

நடைபெறப்போகும் ஆஸிக்கு எதிரான தொடரில் சச்சின் டெண்டுல்கர் ஓட்டங்கள் குவிப்பார் என்று ஷேன் வோர்ன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் ஷேன் வோர்ன் இந்திய அணியின் ஆஸ்திரேலியச் சுற்றுப்பயணம் குறித்து எழுதியுள்ள கட்டுரையில் கூறியிருப்பவை வருமாறு;-

''டெண்டுல்கருக்கு வயதாகிவிட்டதால் அவரால் முன்புபோல திறமையை வெளிப்படுத்த முடியாது என்று சொல்கின்றார்கள். இதில் எனக்கு உடன்பாடு இல்லை. மெல்போண், சிட்னி மற்றும் அடிலெய்ட் ஆடுகளங்கள் தட்டையானவை. எனவே, டெண்டுல்கர் இங்கு நிறைய ஓட்டங்கள் குவிப்பார் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இந்த டெஸ்ட் தொடரில் அவருக்கு ஒன்று அல்லது இரண்டு இன்னிங்ஸ்கள் சிறப்பாக அமையும். இதில் எந்தச் சந்தேகமும் கிடையாது. அதுவும் அதில் நம்ப முடியாத அளவுக்கு அவரது ஆட்டம் இருக்கும்.'' - என்று குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியா - விக்ரோறியா

# பயிற்சியாட்டம் மழையால் பாதிப்பு

மெல்போண், டிச.22

இந்தியா, விக்ரோறியா அணிகளிற்கிடையிலான மூன்று நாள் பயிற்சியாட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தின் பெரும் பகுதி மழையால் பாதிக்கப்பட்டது. நேற்று 10 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டது. மழைகாரணமாக நேற்றைய ஆட்டம் இடைநிறுத்தப்படும் போது இந்தியா 4 விக்கெட் டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி அந்த நாட்டு விக்ரோறியா அணியுடன் பயிற்சியாட்டத்தில் விளையாடி வருகிறது. 3 நாள் போட்டியான இதன் முதல் நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. அப்போது இந்தியா 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 110 ஓட்டங்களை எடுத்திருந்தது. டிராவிட் 33 ஓட்டங்களுடனும், கங்குலி 51 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டம் நடந்தது. கங்குலி மேலும் 8 ஓட்டங்கள் எடுத்து தனது ஓட்ட எண்ணிக்கையை 59 ஆக உயர்த்தி இருந்தபோது வைஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அதன் பிறகு டிராவிட்டுடன், யுவராஜ் சிங் ஜோடி சேர்ந்தார். 16 பந்துகளைச் சந்தித்து யுவராஜ் சிங் 6 ஓட்டங்களை எடுத்திருந்தார். டிராவிட் 38 ஓட்டங்களை எடுத்திருந்தார். இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஆக இருந்தபோது மழை குறுக்கிட்டது. எனவே, ஆட்டம் நிறுத்தப்பட்டது. அங்கு தொடர்ந்து பலத்த மழை கொட்டியமையால் நேற்றைய ஆட்டம் மேற்கொண்டு நடத்தமுடியாமல் இடைநிறுத்தப்பட்டது.




# காலி டெஸ்ட்டின் சிறப்பாட்டம் எனது திறமைக்குத் தகுந்த பதில்

## சமிந்தவாஸ் மகிழ்ச்சி தெரிவிப்பு



காலி, டிச.22

காலி டெஸ்ட் போட்டியில் தான் சகலதுறைகளில் மிளிர்ந்து சிறப்பாகச் செயற்பட்டமையானது தனது திறமை குறித்து கேள்வியெழுப்பியவர்களுக்கு உரிய பதிலையளித்திருக்கும் என்று இலங்கை அணி வீரர் சமிந்த வாஸ் மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

காலி டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 90 ஓட்டங்களைப் பெற்ற வாஸ், பந்துவீச்சில் முக்கிய விக்கெட்டுகளையும் கைப்பற்றி அசத்தினார்.

''எனது திறமை குறித்து பலர் கேள்விகேட்கத் தொடங்கிவிட்டனர். நான் அவர்களுக்கு சில விடயங்களை நிரூபிக்க விரும்பினேன். இந்தத் தொடர் முழுவதும் சிறப்பாக விளையாடியதன் மூலம் அவர்களுக்குப் பதிலளித்துள்ளேன்.'' - என வாஸ் குறிப்பிட்டுள்ளார்.

''ஒவ்வொரு போட்டியிலும் சிறப்பாக விளையாடியதன் மூலம் எனது திறமை காரணமாக தொடர்ந்தும் நான் அணியில் இடம்பிடித்துள்ளேன். இன்னும் ஒரு வருடம் டெஸ்ட் கிரிக்கெட் விளையாடுவேன். அத்துடன் இரண்டு வருடங்கள் ஒருநாள் போட்டிகளில் விளையாடுவேன்.'' - எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

''90 ஓட்டங்கள் பெறுவதென்பது எதனையும் பெறாததைவிட சிறந்தது. நான் துடுப்பெடுத்தாடிய விதம் எனக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. இங்கிலாந்தின் கவுண்டிக் கிரிக்கெட்டில் விளையாடி நிறையக் கற்றுக்கொண்டேன்.'' - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அணிக்கு ஓட்டங்கள் அவசியமாக இருந்தால் பின்வரிசை ஆட்டக்காரர்கள் நிதானமாகத் துடுப்பெடுத்தாட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தொடக்க வீரராகக் களமிறங்கத் தயார்

## டிராவிட் பேட்டி



மெல்போண், டிச.22

சவாலான ஆஸ்திரேலியத் தொடரில் தொடக்க வீரராகக் களமிறங்கத் தயார் என இந்திய அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் ரர்குல் டிராவிட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

''அணி நிர்வாகம் எந்த நிலையில் துடுப்பெடுத்தாடச் சொன்னாலும், அதனை ஏற்றுச் செயற்படத் தயாராகவுள்ளேன். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தொடக்க வீரராகக் களமிறங்கச் சொன்னால், மகிழ்ச்சியோடு ஏற்பேன். எனது பாடசாலைக் காலத்திலிருந்து மத்திய வரிசையில்தான் விளையாடியுள்ளேன். ஆனாலும், தொழில்ரீதியான வீரர் என்ற முறையில் எந்த நிலையிலும் விளையாடத் தயாராக உள்ளேன். இதற்கு முன்பு தொடக்க வீரராக விளையாடிய அனுபவம் இருப்பதால் பிரச்சினை எதுவும் ஏற்பட வாய்ப்பு இல்லை. மூன்றாவதாக வருவதற்கும் தொடக்க வீரராக விளையாடுவதற்கும் பெரிய வித்தியாசம் இல்லை. மனதளவில் சிறிய வேறுபாடு மட்டுமே உள்ளது.

''ஆஸ்திரேலியாவில் நல்ல தொடக்கம் கிடைப்பது மிகவும் அவசியம். தொடக்கத்தில் விக்கெட்டுகளை இழக்காமல் பார்த்துக் கொண்டால், பின்னர் நிலைமையைச் சமாளித்து விடலாம். இந்திய அணி சிறப்பாகச்செயற்பட நான் தொடக்க வீரராக வருவது அவசியம் என்று நிர்வாகம் கருதினால், எனக்கும் சம்மதம்தான். இந்திய அணியின் மத்திய வரிசை வலுவாக உள்ளது. நிறைய இளம் வீரர்கள் இருக்கிறார்கள். இவர்களைத் தொடர்ந்து புறக்கணிக்க முடியாது. சமீபத்திய பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், நல்ல தொடக்கம் கிடைத்தும் நான் பெரிய ஓட்ட எண்ணிக்கையை எட்ட தவறியது ஏமாற்றம் அளித்தது.

''தற்போதைய டெஸ்ட் போட்டிகளுக்கு முன்பு ஒரே ஒரு பயிற்சி போட்டி என்பது சரியல்ல. கூடுதலாக ஒரு போட்டியாவது இருக்க வேண்டும். கடந்த முறை ஆஸ்திரேலியப் பயணத்தின் போது இரண்டு பயிற்சிப் போட்டிகள் இருந்ததால், சிறப்பான முறையில் டெஸ்ட் தொடருக்கு ஆயத்தமானோம். ஆனாலும், சர்வதேச கிரிக்கெட் அட்டவணை மிகவும் நெருக்கடியாக உள்ளது. தொடர்ந்து போட்டிகள் இருக்கின்றன. எனவே, இதைப் பெரிதுபடுத்தாமல், டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்துவதே சிறந்தது.

''ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் பந்துகள் எகிறும் என்பது குறித்து கவலைப்படத் தேவையில்லை. இங்கு 'பவுன்ஸர்கள்' வீசப்படுவது வழக்கம். சிறிது நேரம் தாக்குப்பிடித்து விளையாடி விட்டால், 'பவுன்ஸர்களை' மிக எளிதாகச் சமாளித்து ஆடலாம். மழை காரணமாக விக்டோரிய அணிக்கு எதிரான பயிற்சிப் போட்டி பாதிக்கப்பட்டது. ஆனாலும், 48 ஓவர் வரை விளையாட முடிந்தது நல்ல விடயம்.'' - இவ்வாறு டிராவிட் கூறினார்.

பொதுவாக மத்திய வரிசையில் துடுப்பெடுத்தாடிவரும் டிராவிட், தொடக்க வீரராக 8 போட்டிகளில் மட்டுமே விளையாடியுள்ளார். இதில் பாகிஸ்தானுக்கு எதிராக எடுத்த இரண்டு சதங்கள் உட்பட 369 ஓட்டங்களை (சராசரி 33.55) எடுத்துள்ளார். 2003-04இல் நடந்த ஆஸ்திரேலியத் தொடரில் அசத்தலாகச் செயற்பட்ட இவர் 4 டெஸ்ட் போட்டிகளில் ஒரு இரட்டைசதம் உட்பட 600 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பகலிரவு டெஸ்ட்டுக்கு பிளமிங் எதிர்ப்பு

கிறிஸ்சேர்ச், டிச.22

பகலிரவு டெஸ்ட் போட்டிகளை நடத்த திட்டமிட்டுள்ள ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபையின் முடிவுக்கு ஸ்ரீபன் பிளமிங் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

ருவென்ரி/20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போல் டெஸ்ட் போட்டிகளை ரசிகர்கள் அதிகம் விரும்புவதில்லை. இதைப் பிரபலப்படுத்தும் முயற்சியின் முதற்படியாக பகலிரவு டெஸ்ட் நடத்த ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஆலோசித்து வருகிறது. இம்முயற்சிக்கு பொண்டிங், இயன் சப்பல் உள்ளிட்ட பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இவ்வரிசையில் தற்போது முன்னாள் நியூஸிலாந்து அணித்தலைவர் பிளமிங்கும் இணைந்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியுவை வருமாறு:-

''டெஸ்ட் போட்டிகளுக்கு என தனி அந்தஸ்து உள்ளது. ரசிகர்கள் மனதில் மாற்றங்கள் ஏற்படலாம். அதற்காக போட்டியில் மாற்றம் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. ருவென்ரி/20, ஒருநாள் போட்டிகள் ரசிகர்களின் எதிர்பார்ப்பை ஈடுசெய்கிறது. ருவென்ரி/20 போல் டெஸ்ட்டையும் கருதினால், வருங்காலத்தில் அது அழியும் அபாயம் உள்ளது.'' - இவ்வாறு பிளமிங் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் 1994, 98ஆம் ஆண்டுகளில் உள்ளூர் டெஸ்ட் போட்டிகள் பகலிரவாக நடத்தப்பட்டன. இதில் துடுப்பாட்டவீரர்கள் ஓட்டங்கள் குவிக்கத் தடுமாறியதையடுத்து இத்திட்டம் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# புதிய ஆண்டை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் சானியா



பெங்களூர், டிச.22

அடுத்த பருவகாலத்தில் (சீசனில்) நடக்கவுள்ள போட்டிகளில் பங்கேற்பதை தான் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றார் என இந்திய டெனிஸ் மங்கை சானியா மிர்ஷா கூறியுள்ளார்.

பெங்களூரில் நேற்று பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் சானியா மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''சர்வதேச டெனிஸில் அறிமுகமான சுமார் இரண்டு ஆண்டுகளில் ஓய்வு என்பதே இல்லை. தற்போதுதான் சுமார் ஒரு மாதம் எந்த போட்டியிலும் பங்கேற்காமல் 'ரிலாக்ஸாக' இருந்துள்ளேன். எனினும் டெனிஸை மறக்கவில்லை. பெங்களூரில் மகேஷ் பூபதி, ரோகன் போபன்னா, புரவ் ராஜா மற்றும் பாகிஸ்தானின் குரேஷியுடன் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளேன். அமெரிக்க பயிற்சியாளர் ஸ்காட் மேற்பார்வையில் எனது ஆட்டத்தில் உள்ள சில குறைகளை களைந்தேன்.

''ஓய்வு எனக்கு புத்துணர்ச்சியை அளித்துள்ளது. அடுத்த சீசனில் நடக்கவுள்ள போட்டிகளில் பங்கேற்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். விரைவில் நடக்க உள்ள ஹொப்மன் கிண்ண டெனிஸ் போட்டியில் ரோகன் போபன்னாவுடன் இணைந்து அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் ஜோடியை எதிர்கொள்ளவுள்ளேன். அவரைச் சந்திப்பது சவாலான ...னும், அடுத்த பருவத்தின் முதல் போட்டியிலேயே பலம் வாய்ந்த வீராங்கனையை எதிர்கொள்வது நம்பிக்கை தரும் விடயம். '' - இவ்வாறு சானியா மிர்ஷா கூறினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

*Jaffna Head office*
No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

*Branch office*
No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

## Diploma in Hardware Engineering

❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..

Course Fee :2000/=

## Diploma in Computerized Accounting

ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.

Course Fee :3500/=

## Diploma in Video Mixing

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.

Course Fee :3000/=

## Diploma in Graphic Designing

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX

Course Fee :2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 24/12/2007-9AM


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



அன்னை மடியில்
14✱06✱1943

மண்ணின் மடியில்
22✱11✱2007

**அமரர் சுப்பிரமணியம் பாலசிங்கம்**

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
நேசத்துடன் வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
தூரத்தில் இன்று நீங்கள் சென்றுவிட்டதனால்
துயரத்தில் நாம் இங்கு தேம்பி அழுகின்றோம்.

*அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (22.12.2007) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறும்.*

*அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

100/7, உதயசூரியன் லேன்,
சம்பியன் றோட், கோக்குவில் கிழக்கு , கோக்குவில்.

மனைவி , பிள்ளைகள். (69000)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி நடராஜா**

*(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)*

திதி: திரயோதசி

தோற்றம்
24.06.1946

மறைவு
12.01.2006

எங்கள் எல்லோரையும் தவிக்க விட்டுவிட்டு
எங்கே சென்று விட்டீர்கள்
உங்கள் அன்பு முகத்தை இனி
நாம் எங்கு காண்போம்
உங்கள் வார்த்தைகள் எங்கே?
உங்கள் புன்னகை எங்கே?
உங்கள் அரவணைப்பு எங்கே?
தேடுகின்றோம் கதறி அழுகின்றோம்
எம்மோடு வாழ்ந்த நாள் வரை
அன்பினைச் சொரிந்து எமை எல்லாம்
வசீகரித்த தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வீதி, கொடிகாமம். (69128) குடும்பத்தினர்.


## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (69074)


## தவறிவிட்டது

எனது கைச்சங்கிலி சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று (16.12.2007) கைதடிக்கும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். செல்வி சு.சுப்பிரமணியம், 58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொ.பே.: 222 6806


## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறோயிலர், கல்பேட், ஊர்ச்சேவல் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**அரியாலை பாம் சென்ரர்**
*(யாழ். வர்த். தொழிலாளர் கூ.ச.கி. முன்பாக)*
*98, புங்கன்குளம் வீதி, அரியாலை.* (69209)

## The Jaffna Education Centre
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

நாதன்ஸ் சினிமாவுக்கு முன்பாக (மேல்மாடியில்)

**Spoken English** with **Grammar**

**'சிங்களம்'**

Short hand, Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

"வெளிநாடு" செல்பவர்களுக்கு இலகுவில் குறுகிய காலத்தில் பேசுவதற்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்கப்படும். பாடமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

புதிய பிரிவு ஆரம்பம்: 23.12.2007

இயக்குநர்: இ.லோகநாயகி.


## வறுமைப்பட்ட விவசாயிகளுக்கு 'சோஆ' நிறுவனம் உதவி

வடமராட்சி,டிசெ.22

புலோலி கமநல சேவை நிலையப் பகுதியில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் விவசாயிகள் 64 பேருக்கு தெளிகருவிகளை சோஆ நிறுவனம் வழங்கியுள்ளது.

அவ்வப்பகுதி கமக்காரர் அமைப்புகளின் சிபார்சின் பேரில் இந்த 64விவசாயிகளும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான தெளிகருவிகள் புலோலி கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன. (202-160)

## கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் இறுதிவருட சிறப்புக் கலை மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,டிசெ.22

சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இருந்து கோட்ட மட்ட தமிழ்த்தின விழாவில் பங்குபற்றும் மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு கல்லூரி அதிபர் கே.சிவாஜி கேட்டுள்ளார். (202)


## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,டிசெ22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களின் ஒன்றுகூடலும் கலந்துரையாடலும் எதிர்வரும் 26ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வுக்கு வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி வி.கலாநாயகி கேட்டுள்ளார். (202-207)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்பால் எம்மைக் காத்து
ஆசையால் வழி நடத்தி
இன்பமாய் எங்களுடன்
இருந்து
எங்களை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்ற
சென்றாலும் ஆறுதல் இன்றி
நாம் வாடி நிற்கின்றோம்.

குடும்பத்தினர், நண்பர்கள்.

நுணாவில் மேற்கு. சாவகச்சேரி.

மலர்வு 19.05.1951
உதிர்வு 18.12.2006

**அமரர் கந்தையா பாலமனோகரன்**

திதி: 22.12.2007

## நீங்காத நினைவில் மூன்று ஆண்டுகள்

அமரர்
**கணபதிப்பிள்ளை குணசிங்கம்**



மண்ணுலகில்
18✱07✱1933

விண்ணுலகில்
24✱12✱2004

திதி: திரயோதசி
(22.12.2007)

*எங்கள் குடும்பத்தின் குலதெய்வமே!*
*எங்கள் சூரியவிளக்கே - அப்பா*
*எங்களை விட்டு நீங்கள் பிரிந்து*
*மூன்றாண்டல்ல பல்லாண்டுகள் சென்றாலும்*
*எங்கள் அப்பாவை மறக்கமுடியுமா?*

*44/2, மணல் தரை,*
*கந்தர்மடம்.*

கு.ஜனார்த்தனன் *(மகன்).* (69201)

## 22ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 04 |
| 01 | 01 |
| 1956 | 1985 |

**அமரர் கந்தையா பாலசுந்தரம்**

*அன்பின் உறைவிடமாகி எமையெல்லாம்*
*பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எம் அப்பாவே!*
*உங்கள் நினைவுகளில் மிதக்கின்றோம் அப்பா.*

*இருபத்தியிரண்டு ஆண்டுகள்கடந்தாலும்*
*உங்கள் நினைவில் வாழும்:*
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

*42, யமுனா வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (69095)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 22 |
| 01 | 11 |
| 1930 | 2007 |

**அமரர் தம்பு செல்லத்துரை**

திதி: திரயோதசி

மண்ணுலகில் மேன்மையுடன் நாம்வாழ
குலவிளக்காய் திகழ்ந்தீரே!
விண்ணுலகம் சென்ற நீங்கள்
நலமுடனே வாழ்கவென
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர். (69105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட பணியாளரின் கொலை குறித்து உடன் விசாரணை நடத்துக!

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 22

இலங்கை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணியாளர் யாழ். குடாநாட்டில் கொல்லப்பட்டிருக்கின்றமையைக் கண்டித்திருக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, இக்கொலை தொடர்பாக உடனடியான, சுயாதீன, பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டிருக்கிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வெளியிட்டிருக்கும் கள நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்திருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மேலும் ஒரு பணியாளர் கொலை செய்யப்பட்டமையானது சர்வதேசச் செஞ்சிலுவை, செம்பிறை இயக்கத்தை மட்டுமன்றி இலங்கையின் மனிதாபிமான சமூகத்தையும் ஒட்டுமொத்தத்தில் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. சூரியகாந்தி தவராஜா (வயது - 43) டிசம்பர் 14 அன்று யாழ்ப்பாணம் கல்வியங்காட்டிலுள்ள தனது வீட்டிலிருந்து குடும்பத்தவர்கள் முன்னிலையில் வைத்துஇனந்தெரியாத ஆயுதக்குழுக்களினால் கடத்திச் செல்லப்பட்டார்.

இவரது சடலம் இரண்டு தினங்களுக்குப் பின்னர் கைதடியில் கண்டுபிடிக்கப்பட்டது. செஞ்சிலுவைச் சங்கத்தில் பலவருட காலம் உறுப்பினராய் இருந்து வந்த தவராஜா கடந்த மூன்று வருடங்களாகப் பருத்தித்துறை செஞ்சிலுவைச்சங்கக் கிளையின் தலைவராகப் பணியாற்றி வந்தார். இந்த வருடத்தின் முற்பகுதியில் ஜூன் முதலாம் திகதியன்று மட்டக்களப்புக் கிளையின் இரண்டு ஊழியர்கள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வைத்துக் கடத்தப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐ.சி.ஆர்.சி. இக்கொலைகளைக் கண்டிப்பதுடன், இலங்கையில் பணியாற்றும் மனிதநேயப் பணியாளர்களின் பாதுகாப்புப் பற்றியும் கரிசனம் கொண்டுள்ளது." செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி டூன் வண்டன்ஹூவ் இவ்வாறு தெரிவித்தார். "இக்கொலை தொடர்பாக உடனடியான, சுயாதீன, பாரபட்சமற்ற விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்று நாம் கோருகின்றோம். மனிதாபிமானத் தொண்டர்கள் மதிப்பளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தும் பொருத்தமான ஏற்பாடுகளை ஐ.சி. ஆர்.சி. வேண்டி நிற்கின்றது."

கடந்த நான்கு வார காலப்பகுதியில் ஐ.சி.ஆர்.சி. தனது கண்காணிப்புப் பணிகளையும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் சர்வதேச மனிதநேயச் சட்டத்தின் கீழான அவர்களின் கடப்பாடு பற்றிய கலந்துரையாடல்களையும் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. நாடு முழுவதிலும் பொது மக்களைப் பாதிக்கும் வகையில் இடம்பெறும் பொது மக்களுக்கு எதிரான தாக்குதல்கள், காணாமல் போதல்கள், சிறுவர் ஆள்சேர்ப்புகள் தொடர்பான குற்றச்சாட்டுகளால் ஐ.சி. ஆர்.சி. பிரச்சினைக்குள்ளாகியது. கைதுகளாலும் மற்றும் ஏனைய உரிமை மீறல்களாலும் பாதிக்கப்பட்டவர்களை, அவர்களது உறவினர்களை, காணாமல் போனவர்களின் உறவினர்களை இதுதொடர்ந்தும் சந்தித்து வருகின்றது.

நவம்பர் 20 முதல், அரசினால் நடத்தப்படும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 214 கைதிகளை அவர்களின் குடும்பத்தினர் சென்று பார்வையிடுவதற்கு ஐ.சி. ஆர்.சி. நிதியுதவி வழங்கியிருந்தது. விடுவிக்கப்பட்ட 42 கைதிகள் தமது வீடுகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவையும் இது பொறுப்பேற்றிருந்தது. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டிகைக்காலத்துக்கென இந்தியாவிலிருந்து அரிசி

கொழும்பு, டிசெ.22

நத்தார், ஹஜ் பெருநாள் மற்றும் புது வருடப் பண்டிகைக் காலங்களை முன்னிட்டு இந்தியாவிலிருந்து 10 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை அரசு இறக்குமதி செய்துள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் நஜீப் ஏ. மஜீத், நேற்று முன்தினம் முதலாவது தொகுதி அரிசியை கோப்சிட்டி கூட்டுறவுக்கடைகள் ஊடாக நாடு முழுவதற்கும் அனுப்பிவைக்கும் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட பொன்னி சம்பா ஒரு கிலோ 52 ரூபா 50 சதத்திற்கும், நாட்டுச் சம்பா 48 ரூபா 60 சதத்திற்கும் நாடு முழுவதும் விற்பனை செய்யப்படும் என அமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில், அத்தியாவசிய சேவைகள் மூலம் தென்னிந்தியாவிலிருந்து நேற்று 3,700 மெற்றிக் தொன் அரிசி கொழும்பிற்கு வந்து சேர்ந்துள்ளதால், குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (சி)



டெங்கு நோய் வருமுன் காத்தல் விழிப்புணர்வுச் சிரமதானப் பணி அண்மையில் தொல்புரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் நடைபெற்றது.

பகவான் சிறுவர் சமூக வட்ட மாணவர்களும், பாணாவெட்டி சமுத்திரா முகாம் குடியிருப்பாளர்களும் கிராம பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் இணைந்து சிரமதானப் பணியில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம்.

# திருநெல்வேலிச் சந்தைப் பிரச்சினைகளும் அவைகளைக் கையாளும் முறைகளும்

திருநெல்வேலிச் சந்தை மக்களின் பொருள் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கை வகிக்கிறது. அங்கு நிலவும் சீர் கேடுகள் காரணமாக மக்களுக்குப் பெரும் இன்னல்கள் விளைகின்றன. இதுபற்றி பலமுறை பத்திரிகையில் செய்திகள் வந்துள்ளன அங்குள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கு பல தரப்பினருடைய பங்களிப்புத் தேவைப்படுகிறது. யார் என்றாலும் எந்த ஒரு விடயத்தைக் கையாளும் போதும் வழமையான நடைமுறை அல்லது அவற்றிற்கென வகுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் என்பனவற்றை ஆராய்ந்து அவசியம் செய்வதற்கான வசதி கிடைத்தவுடன் ஏற்கனவே உள்ள வளங்களுடன் கருத்திற்கெடுக்க வேண்டிய விடயங்களை ஒதுக்கிவிட்டுச் செயற்படுவது நமது வழமையாகிவிட்டது.

கட்டட அமைப்புகள் ஆரம்பிக்கப்படும்போது இருந்த நிலைமைகள் தொடர்ந்து அதே மாதிரி இருப்பதுமில்லை. வேறு புதிய சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதுமில்லை. இவற்றைக் கருத்திற் கொண்டு நிர்வாகிகள் செயற்படவேண்டியது தவிர்க்கமுடியாதது.

திருநெல்வேலிக் கட்டடத் தொகுதி UNDP நிறுவனத்தால் திட்டமிடப்பட்டபோது பல முக்கிய விடயங்கள் திட்டமிடப்பட்டன. காலப் போக்கில் பல காரணங்க்ளினால் அவை நடைமுறைப்படுத்தப்படாமற் போயின. திட்டமிடுதலுக்குத் தரவுகள் பெறப்பட்டபோது ஏற்பட்ட குறைபாடுகளும் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைகின்றன. ஆனபடியால் வெறுமனே எமக்கு இலகுவாகத் தென்படும் குறைகளை மட்டும் நாம் பேசிக் கொண்டிருக்காமல் முழுமையாக ஆராய்ந்து செயற்பட வேண்டியது அவசியம்.

பொதுமக்களின் உபயோகத்திற்காகக் கட்டப்பட்ட கட்டடங்களில் மாற்றங்கள் செய்ய வேண்டி வருவதும் விரிவாக்கல்கள் இடம்பெறுவதும் நடைமுறையிலுள்ள விடயங்கள்தான். ஆனால் அவற்றை எப்படிச் செய்ய வேண்டுமென்பதில் தான் நாம் கவனமாக இருக்க வேண்டும். பொதுவாக வளாகங்கள் போன்று கட்டடத் தொகுதி அமைக்கப்படும் போதும் சரி, பின்னர் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் போதும் சரி நிபுணத்துவ ஆலோசனை அவசியம். எதையு

## மக்கள் மன்றம்

மே அவ்வத்துறை சார்ந்தவர்களை ஒதுக்கிவீட்டுச் செயற்படும் எமது மனப்பாங்கு இவ்விடயத்திலும் தலைகாட்டியிருக்கிறது என்று கொள்ள இடமுண்டு. மேலும் ஆரம்ப அமைப்புகள் தொடக்கம் விரிவாக்கல்வரை விவரமான அறிக்கைகள் பேணப்படுவது தொடர்ந்துவரும் அதிகாரிகளுக்கும் ஆலோசகர்களுக்கும் பெரிதும் பயன்படும்.

தற்போது திருநெல்வேலிச் சந்தையில் காணப்படும் முக்கிய பிரச்சினைகள் நீர்வடிகாலமைப்பும் மலகூட அமைப்பும்தான். மக்கள் மாரிகாலங்களில் பெரிதும் அல்லல்படுவதற்கு முக்கிய காரணம் வடிகாலமைப்புத்தான் சாதாரணமாக எமது கட்டடங்களைச் சற்று உயர்த்தி அமைத்து இப் பிரச்சினை அதிகம் சிக்கலாகாமல் செய்வதுண்டு. UNDP இதைத்திட்டமிட்ட போது அவர்கள் வேறு விதமாக இதைக் கையாண்டார்கள். இக்கட்டட அமைப்புக்கான ஆலோசனைக்கென ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு கட்டட நிபுணரும் ARCHTECT ஈடுபடுத்தப்பட்டு அவருக்கும் சில லட்சங்கள் ஊதியமாக வழங்கப்பட்டன. வடிகாலமைப்பு மற்றைய இடங்களில் இல்லாவிட்டாலும் இங்கு ஏற்படுத்தப்பட்டு மழைநீர் பிரச்சினை தீர்க்கப்படும் என்று அவர்கள் கருதினார்கள். முன்னர் குறிப்பிட்டது போலக் கட்டடத்தை உயர்த்தி இதற்குத் தீர்வு காணலாம் என்று ஆலோசனை கூறப்பட்டபோது வடிகால் அமைத்துப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று அவர்கள் உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். அதற்கென அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபடமும் பிரதேச சபையில் இருக்கக்கூடும்.

ஆகவே மழைநீர்ப் பிரச்சினையை திருநெல்வேலிச் சந்தையில் முடிவுக்குக் கொண்டுவர வேண்மானால் உடனடியாக நிபுணத்துவ ஆலோசனை பெறப்பட்டு அதற்கேற்பச் செலவைப் பார்க்காமல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே பல விரிவாக்கல்கள் மாற்றங்கள் கூட நிகழ்ந்து விட்டன. எல்லாவற்றையும் முழுவதுமாக ஆராய்ந்து செயற்பாட்டுக்குத் தக்க ஏற்பாடு செய்வதுதான் உசிதமானது. இதை விடுத்து காலத்திற்குக் காலம் பிரச்சினைகள் ஏற்பட ஏற்பட நாம் அவற்றை விவாதித்துப் பலன் ஏற்படப் போவதில்லை.

அத்துடன் சந்தைக்கு வருவோர் மற்றும் வியாபாரிகளின் நலன்களும் பேணப்படக் கூடிய அளவில் கண்காணிப்பும் அவசியம். சம்பந்தப்பட்டவர்கள் இதில் போதிய கவனம் எடுத்து இப்படியான வளாக அமைப்புகளின் தன்மையை அறிந்தவர்களின் ஆலோசனையைப் பெற்று அவர்களின் வழிகாட்டலின் அடிப்படையில் செயற்பட வேண்டியது அவசியம்.

வை.சந்திரபாலன் - கொக்குவில்

## மற்றும் இரண்டு தமிழ் எம்.பிக்களின் பாதுகாப்பு குறைப்பு

கொழும்பு, டிச. 22

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரினது பாதுகாப்பையும் அரசு திடீரெனக் குறைந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிறி காந்தா ஆகியோரினது பாதுகாப்பே நேற்று முன் தினம் வியாழக்கிழமை முதல் குறைக் கப்பட்டுள்ளது.

மகேஸ்வரனின் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை 18 இலிருந்து 2 ஆகவும் சிறிக்காந்தாவின் பாதுகாப்பு அதிகாரிகளின் எண்ணிக்கையை 9 இலிருந்து 4 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியின் பாதுகாப்பை அரசு கடந்த புதன்கிழமை முன்தினம் குறைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## "எயர் லைன்ஸ்" அதிகாரிக்கு நாட்டைவிட்டு வெளியேற உத்தரவு

ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி பீற்றர் கில் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டிருக்கிறார் என அந்த நிறுவனத்தின் பேச்சாளர் சந்திரான டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

நிறைவேற்று அதிகாரி பீற்றர் கில் நாட்டில் தங்கிப்பணியாற்றுவதற்கான உரிமம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன் அவரை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேறிவிடுமாறு இலங்கை முதலீட்டுச் சபையின் பரிந்துரைக்கு அமைய கேட்கப்பட்டிருக்கிறது.

முதலீட்டு சபைகளின் தகவல்களின்படி லண்டனில் இருந்து கொழும்பு திரும்புவதற்கு ஜனாதிபதியின் குழுவைச் சேர்ந்த 35 பேருக்கு ஆசனங்களை வழங்கவில்லை.

மாற்றுவழிகளில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தயாராக இருந்தபோதிலும் ஜனாதிபதி யின் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்றும் கூறப்படுகின்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### ஏ.தனராஜ்

நல்லூர் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களை இலங்கை சமூகப் பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத்தில் இணைத்த கள உத்தியோகத்தர் ஏ.தனராஜ் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(69206) நல்லூர் பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள்.

## 33ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மண்ணில் 16 03 1927



விண்ணில் 22 12 1974

### திருமதி கனகாம்பிகை சபாரத்தினம்

திதி: 18.12.2007

நீண்ட தூரம் எம்மை விட்டுச் சென்றாலும்
நீங்காது உங்கள் முகம்
நிலையாக எம்மனதில் வாழ்கின்றது!
நிஜமாக உங்களோடு வாழ்ந்த நாள்கள்
நிழலாகிப் போனாலும்
நினைவுகள் எம்மனதை ஆள்கின்றது!

குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
''திலக வாசம்''
தபாலகீ வீதி, சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

(சி/54517)

## வடமராட்சியில் பட்டம் ஏற்றும் சீஸன்

குடத்தனை, டிச.22

வடமராட்சிப் பகுதியில் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு பட்டம் ஏற்றும் சீஸன் ஆரம்பமாகி உள்ளது.

கொக்கு, நட்சத்திரம், பிராந்து, மணிக்கூடு, பெட்டி, படலம் ஆகிய பட்டங்கள் ஏற்றப்பட்டு வருகின்றன.

வடமராட்சி பகுதிகளில் உள்ள கடைகளிலும் இந்தப் பட்டங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

தற்பொழுது பாடசாலை விடுமுறையாதலால் சிறுவர்கள் முதல் இளைஞர்கள் வரை இந்தப் பட்டங்களை ஏற்றி வருகின்றனர்.

(202-78-155)

## தவறிவிட்டது

54/6, கொழும்புத்துறை வீதி, பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த மேரி கிறேஸ் புஸ்பம் யோசவ் அன்ரனி என்பவருடைய தே.அ. அட்டை இல (508541856V) பாண்டியந்தாழ்வுக்கும் கோயில் வீதி (Temple Rd)க்கும் இடையில் 18.12.2007 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து **ஜோய் கணனி பதிப்பகம், 594, பிரதான வீதி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

தொடர்பு: 021 222 6417 (69222)

## மரண அறிவித்தல்

### மழவராயமுதலி கனகம்மா



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மழவராயமுதலி கனகம்மா 20.12.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மழவராயமுதலி அவர்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்.

கே.கே.எஸ். வீதி,
தாவடி.

(69219)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 01 ★ 11 ★ 1938



மறைவு 22 ★ 11 ★ 2007

### அமரர் சரவணை திருநாவுக்கரசு

கடந்த 22.11.2007 அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (22.12.2007) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

புகையிரத வீதி,
மல்லாகம்.

(சி/54777)

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் கனகசபாபதி சின்னத்துரை

தோற்றம்
31.08.1930

மறைவு
22.11.2007

*எமது அன்புத் தெய்வமே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்*

கடந்த (22.11.2007) அன்று காலமான எங்கள் குடும்ப விளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு எம்மோடு துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலமும் பிறவழிகளிலும் எம்முடன் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்து உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு, இன்று (22.12.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

முத்துத்தம்பி லேன்,
மானிப்பாய்.

(69214)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கச்சிப்பிள்ளை கந்தசாமி

**திதி: 10.01.2008**
**பூர்வபக்க துதியை**

அன்பின் சிகரமே! எம் குடும்பத்தின் திருவிளக்கே!
பண்புக்கோர் இலக்கணமான பாசத்தின் உறைவிடமானவரே!
நன்னெறி தவறாத நேர்மையான உத்தமியே!
நாம் எல்லாம் வளத்தோடும், மதிப்போடும், சிரிப்போடும்
வாழ்வதற்கு வித்திட வந்தவரே!
ஒன்றாக நாமிருந்து வாழ்ந்த காலமெல்லாம்
மண்ணோடு மண்ணாக போனதே
இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு ஏன் அம்மா மறைந்தீர்கள்
நடமாடும் வீட்டில் படமாகிப் போனீர்கள்
அரவணைத்த குலவிளக்கு அணைந்து விட்டதம்மா
தலை நிமிர்ந்து நேர்மையுடன் நீ நடந்த
தடங்கள் அழிந்து விட்டதம்மா
நீங்கள் மறைந்ததுதான் ஓராண்டு சென்றதே தவிர
எங்கள் மனதைவிட்டு ஒருபோதும் நீங்கள் மறையவில்லை
உங்கள் சிரித்தமுகம் நாம் காணாமல் பரிதவிக்கின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

மகள், மருமகன், பேரன், பேரமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்.

மலர்வு 26.07.1919

உதிர்வு 22.12.2006

வல்வெட்டி.

(சி/54775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# புலி விமானங்களுக்குப் பயந்து கூட்டு விமானப்படை ஒத்திகை?

விடுதலைப் புலிகளின் விமானப் படையினால் ஏற்பட்டுள்ள வான் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தில் இலங்கையுடன் சேர்ந்து பல்வேறு கூட்டு விமானப்படை ஒத்திகையை மேற்கொள்ள இந்தியா தீர்மானித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விஜயசிங் இவ்வார முற்பகுதியில் கொழும்பில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்த சமயம் விடுத்த அழைப்பை அடுத்தே இந்தக் கூட்டு விமானப்படை ஒத்திகைக்கு இணக்கம் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சினதும் உள்துறை அமைச்சினதும் செயலாளர்கள் உள்ளிட்ட. எட்டு உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று இலங்கைக்கு வந்து தங்கி நின்றது. அக்குழு இலங்கையில் பல்வேறு தரப்பினருடனும் உயர்மட்டத்தில் பேச்சுகளை நடத்தியிருக்கின்றது.

அத்தகைய பேச்சுகளுக்கு நடுவிலேயே இத்தகைய கூட்டு விமானப்படை ஒத்திகை குறித்தும் பேசப்படுகின்றது எனத் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டு விமானப்படை ஒத்திகைக்கான முன்யோசனை இந்தியத் தரப்பினால் பிரேரிக்கப்பட்டதாகவும் -

கொள்கையளவில் இந்த யோசனைக்கு ஒப்புதல் தெரிவித்த இலங்கை அதிகாரிகள் எது எப்படியிருந்தாலும் இலங்கையின் உயர் பாதுகாப்புக் கவுன்ஸிலின் கூட்டத்தில் இந்த விடயத்தை விரிவாக ஆராய்ந்து, அங்கு ஒரு முடிவு எட்டப்பட்ட பின்னரே இவ்விடயம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கமுடியும் எனத் தெரிவித்தனர் எனவும் - தகவல்கள் கூறுகின்றன.

ஆக, கூட்டு விமானப்படை ஒத்திகைக்கான யோசனை இந்தியத் தரப்பிடமிருந்து வந்துள்ளது. சாதகமாக அதைப் பரிசீலிக்க இலங்கை கோடிகாட்டியிருக்கிறது. இவ்வளவு தான் விடயம்.

புலிகளின் விமானப்பலத்தை முறியடிப்பதற்காகத் தான் இந்தக் கூட்டு விமானப்படை ஒத்திகை முயற்சி என்ற சாரப்பட இதற்குச் சாயம் பூசுவதைப் பார்க்கும்போது மிக வேடிக்கையாக இருக்கின்றது.

புலிகளின் விமானப்படை வலிமை குறித்து இந்தியா கவலையும், சிரத்தையும், அச்சமும் கொண்டிருப்பது போலவும், அதன் காரணமாக முற்கூட்டியே பாதுகாப்புக்காக இலங்கையுடன் கூட்டு ஒத்திகை நடத்தித் திட்டங்களையும் வியூகங்களையும் வகுக்க இந்தியா துடிப்பது போலவும், இந்தியாவின் இத்திட்டம் குறித்து பரிசீலித்துத் தான் இலங்கை முடிவு கூறும் என்பது போலவும் இந்தச் செய்திகள் வெளியிடும் கதைப் போக்கு அமைந்திருக்கின்றது.

அதுவல்ல உண்மை விவகாரம்.

புலிகளின் விமானங்களால் எழுந்துள்ள அச்சுறுத்தல்களை அடுத்துத் தனது வான் வலிமையை அதிகரிக்கத் துடியாய்த் துடிக்கும் இலங்கை, அதற்காக 'மிக் - 29' ரக குண்டுவீச்சு விமானங்களைத் தருவிக்கக் கங்கணம் கட்டி நிற்கிறது. அந்த விமானங்களை பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளிடமிருந்து குறைந்தபட்சம் குத்தகைக்குப் பெறவும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பது நமக்குத் தெரிந்த பரகசியம்தான்.

இந்தியாவிடம் இருக்கும் ஆக வேகம் கூடிய தாக்குதல் குண்டுவீச்சு விமானங்கள் கூட ஏறத்தாழ இத்தகைய ரகத்தை ஒத்தவைதான்.

எனவே, புலிகளின் விமானப்படை அச்சுறுத்தல் என்ற பூச்சாண்டியைக் காட்டி இத்தகைய அதிவேகத் தாக்குதல் விமானங்களை சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிடம் குத்தகைக்குப் பெற்று, அந்த நாட்டு விமானிகளுடன் கொண்டுவந்து, இந்தியாவின் தென்மூலையில் - பலாலிப் படைத்தளத்தில் - இலங்கை நிறுத்துமானால் இந்தியாவின் கதி என்னவாகும்?

இந்தியாவின் வடமேற்கிலும், வடகிழக்கிலும் இருக்கும் அயல் தேச முரண்சக்திகளைத் தெற்கிலும் - அதுவும் இந்தியக் கடலோரத்தில் இருந்து சுமார் இருபது மைல் தொலைவுக்குள் இந்தியாவின் கொல்லைக்குள் - கொண்டு வந்து நிறுத்த அனுமதித்தால் அதன் விளைவு எவ்வாறானதாக இருக்கும்?

எனவே இத்தகைய அச்சுறுத்தல் ஏற்படுவதைத் தவிர்க்கும் முற்கூட்டிய - முன்னெச்சரிக்கையான - நடவடிக்கையாகவே இலங்கை விமானப்படையுடன், இந்திய விமானப்படை கூட்டு ஒத்திகை என்ற ''கயிறை'' வீசுவதற்கு முனைகிறது இந்தியா. அதற்குப் புலிகளின் விமானப் படையால் எழுந்துள்ள அச்சுறுத்தல் என்ற பூச்சாண்டியைக் காரணம் காட்டுவது மிக வேடிக்கையானது.

'மிக் - 29' போன்ற அதிவேகத் தாக்குதல் விமானங்கள் கண்மூடி, கண் திறப்பதற்குள் பல டசின் மைல்கள் தாண்டி குண்டுவீச்சை நடத்திவிட்டுத் திரும்பக்கூடியவை.

அத்தகைய விமானங்கள் தனது தென்கோடி மூலையில் இருப்பது தனக்கும் அச்சுறுத்தல் எனக் கருதும் இந்தியா, அத்தகைய விமானங்களை பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் பங்களிப்புடன் இலங்கை பெற்றுக் கொள்வதைத் தவிர்க்கச் செய்வதற்காக - தடுப்பதற்காக - தன்னுடைய தலையை இதற்குள் நீட்டப் பார்க்கின்றது. அத்தகைய எத்தனத்தின் ஓர் அங்கமே இத்தகைய கூட்டு விமானப்படைப் பயிற்சி நடவடிக்கை யோசனையுமாகும்.

'புலிகளின் விமானப்படை அச்சுறுத்தல்' என்ற காரணம் அதற்கான பாசாங்கு. அவ்வளவுதான்.

# இலங்கையில் கடந்த 11 மாதங்களில் 6,200 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

## தடுப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்த அறிவுறுத்து

குருநகர்,டிசெ.22

இலங்கையில் இவ்வருடம் ஆரம்பம் முதல் கடந்த நவம்பர் மாதம் வரை 6ஆயிரத்து 200 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் என மத்திய சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சின் நோய்த்தடுப்பு பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்வருடம் டெங்கு நோயின் தாக்கம் நாடு முழுவதும் அதிகரித்துள்ளமையால் உடனடித் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சகல பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்களையும் இப்பிரிவு கோரியுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தறை, யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம், அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந்நோய் பரவியுள்ளது.

இந்நோயினால் 24 பேர் இறந்துள்ளனர். கடந்த நவம்பர் மாதம் மட்டும் ஆயிரத்து 20 பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் சுகாதார அமைச்சின் புள்ளி விவரங்கள் தெரிவித்துள் ளதாகவும் இப்பிரிவு தகவல் வெளி யிட்டுள்ளது.

இதுவரை காலமும் எமக் குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு இந்நோயைத் தடை செய்வதற்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் இன்னும் இரண்டொரு மாதங்களில் இந்நோய் மேலும் தீவிரமாகப் பரவக்கூடும்.

எனவே டெங்கு நோய் பரவியுள்ள மேற்கூறிய மாவட்டங்களில் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(202-51)



நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வும் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப் பாளர் எஸ்.நந்தகுமார் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் பாடசாலை அதிபர் ஐ.நடராஜா நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்: சுந்தர)*

# தாதிய உத்தியோகத்தர்கள் மலேசியாவின் சுகாதார அமைச்சில் பணிபுரிய வாய்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

மலேசிய அரசாங்கத்தின் கீழ் அந்நாட்டு சுகாதார அமைச்சில் கடமையாற்றுவதற்கு தாதிய உத்தியோகத்தர்களிடம் இருந்து மலேசிய பொது சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நிபுணத்துவமற்ற தாதிகள், நிபுணத்துவம் உடைய தாதிகள் என இரு பிரிவினரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

21-50 வயதிற்குட்பட்ட ஆங்கிலப் பேச்சு மற்றும் எழுதுவதில் சரளமாகவும் முறையான தாதிப் பயிற்சி பெற்றிருப்பதுடன் தாய் நாட்டின் செல்லுபடியாகும் தொழிற்பதிவு மற்றும் அனுமதிப்பத்திரததை விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும். நிபுணத்துவம் பெற்ற, நிபுணத்துவம் பெறாத இரு பிரிவினரும் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவத் தையும் கொண்டிருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை 2008 ஜனவரி 10ஆம் திகதிக்கு முன்னர் MINISTRY OF HEALTH MALAYSIA, HUMAN RESOURCE DIVISION (Paramedic and auxiliary unit) LEVEL 9, BLOCK E7, COMPLEXE FEDERAL GOVERNMENT ADMINISTRATION - CENTRE 62590 - PUTRAJAYA என்னும் முகவரிக்கு அனுப்பும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை 603-888 338 88, 603 - 88832945 என்னும் தொலைபேசி இலக்கங்கள் மூலமோ 603-88888835 என்ற தொலைநகல் இலக்கம் மூலமோ Kejururawatan@Moh.gov.my என்ற ஈமெயில் முகவரியூடாகவோ பெற்றுக்கொள்ளலாம். (202-53)

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.22

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஐயனாருக்காக அமைக்கப்பட்டுள்ள புதிய சிற்பத் தேரின் வெள்ளோட்ட விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடராசப் பெருமானுக்கு அமைக்கப்பட்ட புதிய சிற்பத்தேரை அடுத்து ஐயனாருக்கான புதிய சிற்பத் தேரும் அமைக்கப்பட்டு இன்று வெள்ளோட்ட விழா இடம்பெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடேசர், ஐயனார் ஆகியோர் புதிய சிற்பத் தேர்களிலும் ஏனைய பரிவார மூர்த்திகளுமாக பஞ்ச ரதங்களில் பவனி வர உள்ளனர்.

(202-250)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 07 | ஞாயிற்றுக்கிழமை 23.12.2007 |
| திதி : சதுர்த்தசி | மு.ப. 09.54 |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் பின்னிரவு 06.01 |

பூரணை விரதம்,
இரவு நடேசர் ஆருத்திராபிஷேகம்

| | |
|---|---|
| சுபநேரம் | : 09.25 - 10.55 |
| ராகுகாலம் | : 04.55 - 06.25 |

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கையளிப்பு

பருத்தித்துறை,டிசெ.22

பருத்தித்துறை பிரதேசத்தில் ஆழிப் பேரலை அனர்த்தத்தின்போது தமது வீடுகளை இழந்த மக்களுக்கு போரூட் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட ஒரு தொகுதி வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பொலிகண்டி மேற்கு மீனவர் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வீடுகளைப் பயனாளிகளுக்குக் கையளித்தார். (202-226)

# தென்மராட்சியில் 23 பேருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,டிசெ.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறும் 23பேருக்கு சுயதொழில் உதவித்தொகை வழங்கப்படவுள்ளது.

மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினரால் இரண்டு கட்டங்களாக தலா 5 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட 23 பேருக்கான முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 26ஆம் திகதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (202-207)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.22

திருமறைக் கலாமன்றம் நடத்தும் கூத்துவிழா இன்றும் நாளையும் பிற்பகல் 3 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பரிசளிப்பு, அரங்க அளிக்கைகள், இறுவட்டு வெளியீடு, நூல் வெளியீடு, அண்ணாவிமார் கௌரவிப்பு என்பன இடம்பெறும்.

(202)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.22

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழா இன்று சனிக்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் திருவாசகம் பற்றிய சிறப்புச் சொற்பொழிவுகளும் மணிவாசகர் சபை நடத்திய சைவசமய பாடப் பரீட்சையில் அதியுயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் தங்கப் பதக்கங்களும் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் நடை பெறவுள்ளன.

தங்கப்பதக்கங்கள் பெறும் மாணவர்கள் விவரம் வருமாறு:-

கி.பிரியா (தரம் - 3, வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), தி.வினோஜா (தரம் - 5, சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலை), சி.ராகுலன் (தரம் - 7, கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), எம்.மேகலா (தரம் - 9, கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), யோ.வித்தியா (தரம் - 10, யாழ்ற்ரன் கல்லூரி)

(202-250)

* * *

வலி.தென்மேற்கு,டிசெ.22

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஒளிவிழா எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராகப் பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு எம்.ஜேசுரட்ணம் அடிகளார் கலந்து கொள்வார். (202-135)

* * *

குடத்தனை,டிசெ.22

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வில் நாளை ஞாயிற்றுக்கிழமை ''நாராயணனின் முப்பெரும் வடிவங்கள்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்றுவார். (202-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பூமியாக விளங்கிய பலஸ்தீனத்தில் கண்ணீரும் செந்நீரும் சேர்ந்தோடும் அவலம்

**எப்போதுமே, சுதந்திரப் போராட்டங்கள் அனைத்தும் அதிகார மேலாதிக்கச் சக்திகளால் ஒடுக்கப்பட்டு, நசுக்கி நிர்மூலமாக்கப்பட்டே வந்துள்ளன. இறுதியில் அவை ஏதோ ஒரு வடிவில் தலைதூக்கித் தமது இலட்சிய வேட்கையை நிறைவேற்றிக் கொண்டுள்ளதையும் மறுக்கவோ மறக்கவோ இயலாது. அதற்கு வரலாற்றில் நிறையவே சான்றுகள் உள்ளன.**

**அந்த வகையில் கடந்த 6 தசாப்தங்களுக்கு மேலாகவே பலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டம் மிலேச்சத்தனமாக அடக்கி ஒடுக்கி, அடிமைப்படுத்தப்பட்டு வருவதையும், ஆனால் தற்காலப் புறச்சூழல் அப்போராட்டத்துக்குச் சாதகமாக உருவாகி வருவதையும் புலப்படுத்தும் வகையில் அமைகிறது இக்கட்டுரை**

**ஸ்ரீ லங்கா - பலஸ்தீன ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைத் தலைவரான இம்தியாஸ் பாக்கீர் மாக்காரினால் எழுதப்பட்ட இக்கட்டுரை 'லக்பிம' பத்திரிகையில் பிரசுரமாகியது.**

**அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்பபடுகிறது.**

மிக நீண்ட காலமாகவே பெரும் எண்ணிக்கையான மக்கள் நிர்மூலமாக்கப்பட்டு வந்துள்ளதும் எதிர்காலத்திலும் இஸ்ரேலியர்களின் மிலேச்சத்தனமான வன்முறைச் செயற்பாடுகளுக்கு இரையாகிப் போகும் தலைவிதிக்கு உள்ளாகியுமுள்ள மக்கள் வாழும் பலஸ்தீன ராச்சியம் உருவாகி, கடந்த நவம்பர் 29ஆம் திகதியுடன் 60 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன.

கடந்த காலத்தில் பெறுமதி மிக்கதொரு புனித பூமியாக நிலவிய இப்பலஸ்தீன ராச்சியத்தில், இன்றைய காலகட்டத்தில் நியாயமாக நிலவவேண்டிய சமதர்மவாதத்துக்குப் பதிலாகப் பிரிவினை வாதமும், சமாதானத்துக்குப் பதிலாகப் பயங்கரமும், சுதந்தரத்துக்குப் பதிலாக அடக்குமுறையும் அவற்றையும் மீறிச்செல்லும் விதத்தில் இரத்தமும் கண்ணீரும் சிந்தப்படுமொரு பூமியாகவே இனங்காட்ட முடியும்.

### பலஸ்தீனம் தொடர்பான நெல்சன் மண்டேலாவின் கருத்து

ஒரு காலகட்டத்தில் தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவிவகித்த நெல்சன் மண்டேலா,



நியூயோர்க்கிலிருந்து வெளிவரும் 'நியுயோர்க் டைம்ஸ்' பத்திரிகையுடன் இடம்பெற்ற சந்திப்பொன்றின் போது, ஊடகவியலாளரான தோமஸ் பீட் மனிடம் பலஸ்தீனம் குறித்து கீழ்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார்.

''இஸ்ரேல் ராச்சியமென்பது தானாகவே உருவானதொரு நாடல்ல. 1967ஆம் ஆண்டில், தாம் வாழ்ந்துவந்த பிரதேசத்தை அண்டியிருந்த நாடுகள் இஸ்ரேலியர்களால் பலவந்தமாகக் கைப்பற்றிக் கொள்ளப்பட்டதை அடுத்தே உருவாக்கப்பட்டது. தென்னாபிரிக்காவில் அந்நாட்டு மக்களால் சுதந்திரத்திற்காக மேற்கொள்ளப் பட்டுவரும் போராட்டத்துக்குச் சமமானதொரு போராட்டமே பலஸ்தீனியர்களால் தமது ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் சுதந்திரமாக வாழ்வதற்காகவும் அங்கு சமதர்த்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமது உயிர்களைப் பணயம் வைத்தே அந்த மக்கள் போராடி வருகின்றனர்.

தீவிரப் பிரிவனைவாதச் சிந்தனையில் மூழ்கியுள்ள இஸ்ரேலியர்களால், பலஸ்தீனியர்கள் அடிமைகளாகவே நோக்கப் படுகின்றனர்.

பிரிவினைவாதம் என்று மனித குலத்துக்கு எதிரான மனோநிலை ரீதியில் மேற்கொள்ளப்படும் கொலையே ஆகும். சர்வதேச சட்டத்தையும், குடிசார் மக்களையும், எதிர்காலத்தைப் பொறுப்பேற்றுக் கொள்ளவிருக்கும் சிறார்களையும் அபாயத்துக்குள்ளாக்கும் மற்றும் உதாசீனப்படுத்தும் மிலேச்சத்தனம் எனவும் பிரிவினைவாதத்தை அடையாளப்படுத்த முடியும்'' என்று

## பலஸ்தீனத்துக்குச் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் வேண்டிநிற்கும் நாட்டுப்பற்றாளர்களைப் பயங்கரவாதிகளென மேற்குலகம் சித்திரிக்கின்றது

தெரிவித்திருந்தார்.

இந்த மிலேச்சத்தனமான யுத்தம் காரணமாக 1947ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரையான காலத்துள் மற்றும் இற்றை வரையிலும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் இஸ்ரேலியர்களால் நேரடியாகவே கொலை செய்யப்பட்டுள்ளனர்.

உலகின் ஆற்றல்மிக்க ஊடகங்களின் மேலாண்மையைப் பிரயோசனப்படுத்தி, பலஸ்தீன மக்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ள இந்த அநீதி மற்றும் அராஜகம் குறித்து உலக மக்களின் குரல் மேலோங்கியுள்ள நிலையில், அந்த அவலத்தைத் தடுத்து நிறுத்தி - பலஸ்தீன மக்கள் பாதுகாக்கப்படுவது தொடர்பான தந்திரோபாய ரீதியிலான காத்திரமான நடவடிக்கைகள மேற்குலக ஊடகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

அத்தோடு, அந்த நாடுகள் பெற்றுள்ள நிதிவளம் மற்றும் அதிகார பலம் என்ற இவற்றின் முன்னால் பலஸ்தீனத்துக்குச் சார்பான மக்கள் கருத்தை மேலோங்கச் செய்வதற்கு அவர்களுக்கு ஆற்றல் அமைந்துள்ளது.

### மத விழுமியங்கள் மதிக்கப்பட்ட சமதர்மவாத சமுதாயம்

இந்த நிலைப்பாட்டை வலுவாக உறுதிப்படுத்தும் சம்பவமொன்றுக்கு, அராபிய உலகில் பிரபல்யமான அறிஞரொருவரான கிறிஸ்தவ மதத்தவரான அராபியர், கலாநிதி பயெஸ் சயெக் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

அதாவது, அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றில் அவர் விரிவுரையொன்றை நிகழ்த்திய வேளையில், இடைநடுவில் குறுகிட்ட அமெரிக்க மாணவரொருவரால் அவரிடம் வினாவொன்று எழுப்பப்பட்டது.

அது, அமெரிக்காவில் வாழும் நாம், பலஸ்தீனப் பிரச்சினை குறித்து ஏன் இந்தளவு தூரத்துக்கு அக்கறை செலுத்தவேண்டியுள்ளது என்பதாகும்.

அந்த மாணவனின் வினாவுக்குப் பதிலளித்த கலாநிதி பயெஸ் சயெக் எனது சகமக்கள் இன்று முகம் கொடுத்துவரும் முன்னேற்றமற்ற, மற்றும் பின்னடைவு நிலை குறித்து நான் பெரிதும் கவலையடைகிறேன். ஆனால், அந்தப் பின்னடைவு நிலையின் மத்தியிலும்கூட, இந்த வெளிநாட்டு ஆதிபத்திய வரலா[illegible]

அதை ஏற்றுக்கொள்ளாது பல தசாப்தங்களாக அவர்கள் இந்த சுதந்திரப் போராட்டத்தின் தாக்கத்தைத் தாக்குப்பிடித்து வருவதையிட்டு நான் மிகவும் பெருமையடைகிறேன்.'' எனத் தெரிவித்திருந்தார்.

மேலும் அந்த விவகாரம் தொடர்பாகவும் அம்மாணவனுக்கு அவர் விளக்கமளித்திருந்தார். அதாவது, உமது அந்த வினாவுக்கு நேரடியாகப் பதிலளிக்கவேண்டுமாயின், இவ்வாறு தான் கூறவேண்டியுள்ளது. அது அமெரிக்கர்களாகிய நீங்களும் பலஸ்தீனப் பிரச்சினை குறித்து அக்கறை செலுத்துவதற்குக் கடமைப்பட்டுள்ளீர்கள். அமெரிக்கர்களாகிய நீங்கள்தான் இப்பிரச்சினையை உருவாக்கக் காரணராய் இருந்துள்ளீர்கள்.

நாமின்றிருப்பது தனித்து வாழ நேருமொரு யுகத்தத்தில் அல்ல. இன்று நான் முகம் கொடுக்க நேர்ந்துள்ள சோகமயமான நிலைக்கு, எதிர்காலத்தில் நீங்களும் முகம் கொடுக்க வேண்டி நேரக்கூடும் என்பதாகவே அவரது பதில் அமைந்தது.

எதிர்கால சாதனையாளர்கள் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் செறிந்ததொரு பூமியாக அன்றைய பலஸ்தீனம் மிளிர்ந்தது. யூதர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என்ற சகல இன மக்களும் பலதரப்பட்ட மதங்களும், விழுமியங்களும் மதிக்கப்பட்ட சமதர்மவாத சமுதாயமாகவே அன்றைய பலஸ்தீனம் காணப்பட்டது.

### யூதமக்கள் சார்பான அனுதாப அலை

இன்றோ, அப்புனித பூமியின் உரிமைக்காரர்களான பலஸ்தீனியர்களின் வசிப்பிடங்கள், காணி நிலங்கள், சொத்துகள் ஆயுத பலத்தினால் அடியோடு நிர்மூலமாக்கப்படுகின்றன. அவ்வாறு சொந்தப் பூமியில் அவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக ஐரோப்பா மற்றும் ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருவிக்கப்படுவோர் குடியமர்த் தப்படுகின்றனர். அச்செயற்பாடுகளின் மத்தியில் கொண்டு செல்லப்படும் அறிவை முடக்கும், பிரிவினைவாதத்தை வளர்க்கும் சியோனிஸப் பரவலாக்கமே இன்று பலஸ்தீனம் முழுவதிலும் அரசோச்ச ஆரம்பித்துள்ளது.

கடந்த ஆறு தசாப்த காலமாக பலஸ்தீன மக்களுக்கு விதிக்கப்பட்ட மிலேச்சத்தனமான பலதரப்பட்ட சித்திரவதைகளுக்கு மத்தியிலும், தமது தாய் மண்ணின் சுதந்திரத்துக்கான போராட்டத்தைத் தீவிரத்துடன் முன்னெடுத்து வரும் தேசப்பற்றுமிக்க அந்த மக்களின் உயரிய தியாக வேட்கையின் இலட்சணம், உலகடங்கிலும் வாழும் ஜனநாயகத்தை, சுதந்திரத்தை மற்றும் சமதர்மவாதத்தை விரும்பும் மக்களின் எதிர்பார்ப்புகளையும், அபிலாஷைகளையும் மென்மேலும் வளர்த்துவிடுவதற்குத் தூண்டுதல் வழங்கி வருகிறது.

உலக வரலாற்றில் பெரும் தொகையான மக்களை அகதிகளாக்கிப் புகலிடம் கோர வைத்து வரலாற்றுடன் இணைத்துவிடும் கைங்கரியத்தை மேற்குலக நாடுகளே நடத்திச் செல்கின்றன. அதே மேற்குலக நாடுகளால் அரேபிய உலகின் மையத்தில் செயற்கையாக உருவாக்கி விடப்பட்ட சிறிய இராச்சியமான இஸ்ரேல் அக்கைங்கரியத்தைப் பரவலாக்கி வருகிறது. இஸ்ரேலின் அந்தப் பரவலாக்கச் செயற்பாட்டுக்கு

இன்றைய மேற்குலக நாடுகளான பலவான்களின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்படும் யுத்தம், இஸ்ரேலுக்குப் பெரும் அனுகூலத்தை வழங்கி வருகிறது.



பலஸ்தீனியரைப் பலவந்தமாகக் குடிபெயர்த்த இஸ்ரேலியர்கள்

மத்திய கிழக்கின் சுதந்திரம், ஜனநாயக வாதம் மற்றும் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவது பற்றிப் பெரிதாகப் பேசிவரும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ஜிம்மி காட்டரின் நெறிப்படுத்தலின் கீழ் பலஸ்தீனத்தில் உருவான ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பும் கன்னி முயற்சியைச் சாகடித்தன. ஆனால், அவர்களது, அச்செயல் அந்த நாடுகளின் குறிக்கோள்களின் போலித்தன்மை எந்தளவானது என்பதை மிகத் தெளிவாக உலகிற்குப் புலப்படுத்திக் காட்டியுள்ளது.

**தமிழில்: சரா**

அந்த வகையில், அந்த நாடுகளின் நியாயமற்ற செயற்பாடு எந்தளவு தூரத்துக்குப் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதற்கு இஸ்ரேலில் இடம்பெற்ற சம்பவம் நல்லதொரு உதாரணமாகும். அதாவது, இஸ்ரேலின் டெல்அவிவ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியையான டான்யா ரெயின் ஹாட், இஸ்ரேலினால் பலஸ்தீனியர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதத்தன்மையற்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப்பல்கலைக்கழகத்தில் தாம் வகித்து வந்த பதவிகளைத் துறந்து இஸ்ரேலைவிட்டே வெளியேறுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

நான்கு லட்சங்கள் வரையான பலஸ்தீன மக்களை அகதிகளாக்கி, கிராமங்களையும் விவசாய நிலங்களையும் கூறுபோட்டு வேறாக்கிப் பிரித்து, அவர்களை வேறு பிரதேசதங்களுக்குக் குடிபெயர்ந்து செல்லுமாறு பலவந்தப்படுத்தி, இஸ்ரேலினால் இராட்சத மதில் கட்டப் பட்டுவரும் நிலையில், தொடர்ந்தும் இஸ்ரேலில் வசிப்பதற்குத் தமது மனச்சாட்சி இடமளிக்க வில்லையென்பதே அப்பேராசிரியையின் தீர்மானம் என்பதை உலகிற்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

இத்தகைய நிலைப்பாடு உருவாகியுள்ளதன் மத்தியிலும்கூட, பலஸ்தீனத்துக்குச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் கோரிப் போராடிவரும் நாட்டுப் பற்றாளர் பயங்கரவாதிகளென்றே மேற்குல ஊடகங்கள் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இந்த முரண்பாடான மாயத்திரையைக் கிழித்தெறிந்து யதார்த்தத்தை நாம் நோக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் நாம் ஆசி வழங்க வேண்டியுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் பெய்த தொடர் மழையால் விவசாயச் செய்கையில் பெரும் பாதிப்பு

## உரிய நிவாரணங்களைப் பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.22

குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்த காற்றுடன் கூடிய தொடர்மழையால் விவசாயச் செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் பாரிய நஷ்டத்தைத் தாம் சந்திக்கவுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்படும் விவசாயிகளை இனங்கண்டு உரிய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

தொடர் மழையுடன் விட்டுவிட்டுப் பலத்த காற்று வீசியமையால் வாழைகள் பரவலாகக் குலைகளுடன் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனை விட கோவா, பீற்றூட், கரட் போன்ற பயிர்கள் உள்ள தோட்டங்களில் நீர் தேங்கியுள்ளமையால் பயிர்கள் அழுகும் நிலைமை காணப்படுகின்றது.

இம்முறை பெரும்சிரமத்தின் மத்தியில் புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் உள்ள விவசாயிகள் பெரும் செலவில் விதை உருளைக்கிழங்கு பெற்று நட்டுள்ளார்கள். இவர்களும், வெள்ளம் தோட்டங்களில் தேங்குவதனால் பாதிக்கப்படும் துர்ப்பாக்கிய நிலைமையும் காணப்படுகின்றது.

கடந்த காலங்களிலும்கூட இத்தகைய இயற்கை அனர்த்தங்களால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற போதும் அவர்களுக்கு உரிய நட்டஈடுகள் கிடைக்கப் பெறவில்லை

இம் முறையேனும் உண்மையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளை நேரடியாக இனங்கண்டு உரிய நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்க உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (202-68)

## நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர் விவரம் பார்வைக்கு

அச்சுவேலி, டிசெ.22

தொண்டர் ஆசிரியர்களிலிருந்து நேர்முகப் பரீட்சை மூலம் ஆசிரிய உதவியாளர்களாகத் தெரிவு செய்யப்படவிருப்பவர்களின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்களில் பகிரங்கமாகப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சையின் தெரிவுப் பட்டியல் பொதுமக்களின் பார்வைக்கு பகிரங்கப்படுத்தப்பட்டு பட்டியலில் காணப்படுபவர்களின் தெரிவில் ஆட்சேபனைகள் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. ஆட்சேபனைகள் நேரடியாக மூவர் கொண்ட குழுவால் விசாரணை செய்யப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களில் தெரிவில் தவறு இருப்பின் அதுபற்றிய ஆட்சேபனைகள் குழுவினால் சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் நேரடியாக விசாரணைக்கு உள்ளாக்கப்படுவதோடு ஆவணங்களில் பரிசீலனையும் செய்யப்பட்டு விசாரணை அறிக்கையை மாகாண கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விசாரணை அறிக்கையில் திருப்தி காணப்படும் இடத்து குறிப்பிட்ட எண்ணிக்கையானோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

களநிலை விசாரணைகள் ஆவணப் பரிசீலனைகளின் போது தவறுகள் இனங்காணப்படுமிடத்து சம்பந்தப்பட்டவர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என மாகாண கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்தார். (202-11)

## ஆண்டு விழாவும் கலை விழாவும்

சுழிபுரம், டிசெ.22

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழாவும் முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அராலி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி திருமதி ம.தவதேவி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை திறந்த பல்கலைக் கழக இயக்குநர் எந்திரி ச.ஆ. ஞானேந்திரன் கலந்துகொள்கிறார். (அ-2-28)

## புலோலி ப.நோ.கூ.சங்க களஞ்சியசாலை இடமாற்றம்

வடமராட்சி, டிசெ.22

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியம் மந்திகையிலுள்ள யாழ். செயலகத்திற்கான உணவுக் களஞ்சிய கட்டடத்திற்கு இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிராமக் கோட்டடியில் உள்ள சங்க தலைமை அலுவலகத்துடன் இணைந்துள்ள சுமார் 50 ஆண்டுகள் பழமை வாய்ந்த களஞ்சியக் கட்டடம் தேச நிர்மான அமைச்சின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக சங்கத்தின் களஞ்சியம் மந்திகைக்கு இடம் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது. (202-160)

## சாவகச்சேரியில் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், டிசெ. 22

சாவகச்சேரி நகர சபையினர் தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை சுகாதார திணைக்களத்தினருடன் இணைந்து நடத்தவுள்ளனர்.

நகர சபை எல்லைக்குள் இயங்கும் சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகள் மற்றும் நகரப்பகுதி மக்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நகரசபைக் கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளதாக நகர சபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தற்போது பெய்து வரும் மழைக்குப் பின்னர் டெங்குக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருவதையிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (202-207)



கற்கோவளம், புனித நகரில் தற்போது இயங்கிவரும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் பருத்தித்துறை பிரதேசசெயலர் இ.வரதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பாடசாலை அதிபர் ச.திரவியராசா, மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறைப் பங்குத் தந்தை அருள்நாதன் ஆகியோர் கூட நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம். புதிய கட்டடத்தை வலயக்கல்விப் பணிப்பாளர் நாடாவெட்டிச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதையும் பருத்தித்துறைப் பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி அருகில் நிற்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம். (160)

## உழவர் திருநாளை முன்னிட்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

வலி. வடக்கு, டிசெ. 22

உழவர் திருநாளை முன்னிட்டு அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம், வலிகாமம் லீக்குகளின் அனுசரணையுடன் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது. பதினொரு பேர் பங்குபற்றும் இச்சுற்றுப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆட்டங்களின் விவரம் வருமாறு:

காலை 8.30 மணி-

*மூளாய் வளர்மதி வி.க. எதிர் அராலி பாரதி வி.க.

*தெல்லிப்பழை யுத். வி.க. எதிர் அராலி ஐக்கிய வி.க.

பிற்பகல் 3 மணி-

*நாவாந்துறை கலைவாணி வி.க. எதிர் சாவற்காடு மகாத்மா வி. க.

*இளவாலை சென் ஹென்றிஸ் வி.க. எதிர் அராலி அண்ணா வி.க.

*அராலி எ.எல்.வி.க. எதிர் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் வி.க. (202-86)

## சஞ்சிகை வெளியீடும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், டிசெ.22

வலிகாமம் தெற்கு பிரதேசசபை பொது நூலக வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் வெளியிடப்படும் 'வெள்ளி மலை' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் கருத்தரங்கும் இன்று முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் வலி. தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளன.

சஞ்சிகையை வ.சசிகுமார் வெளியிட்டு வைக்க முதற் பிரதியை சமாதான நீதிபதி ந.சண்முகவேல் பெற்றுக் கொள்வார்.

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (202)

## யாழ்.சிறைச்சாலையில் கைதிகளுக்கு கொப்புளிப்பான் நோய்த்தாக்கம்

குருநகர், டிசெ.22

யாழ். சிறைச்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் கொப்புளிப்பான் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ் மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இச்சிறைச் சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளின் சுகாதாரம் தொடர்பாக அண்மையில் சென்று ஆராய்ந்தனர். அப்போதே இந்த நோயின் தாக்கம் அறியப்பட்டது என்று யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது.

இச்சிறைச் சாலையில் தற்போது அதிகளவில் சிறைக்கைதிகள் உள்ளனர். அவர்கள் அனைவருக்குமான சுகாதார வசதிகள் போதாமலுள்ளது. இருப்பினும் இயன்ற வரை அடிப்படைச் சுகாதார வசதிகளை வழங்கி உதவுமாறு தான் சிறைச்சாலைப் பொறுப்பதிகாரியைக் கேட்டுள்ளதாக யாழ். மாநகர சுகாதார வைத் திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் மேலும் தெரிவித்தார். (அ-2-51)

# ஆசிரியர்கள் உளவளத்துறைப் பயிற்சிகளை மேற்கொள்வது அவசியத் தேவையாகும்

## வற்புறுத்துகின்றார் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன்



இன்றைய காலகட்டத்திலே ஆசிரியர்கள் உளவளத்துறைப் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டியது கட்டாயமாகும். யுத்த அனர்த்தங்களாலும் சுனாமி மற்றும் வேறு காரணிகளாலும் உளவள நிலையில் பாதிப்படைந்து அல்லலுற்றிருக்கும் மாணவர்களின் உளவளப்பாதிப்புகளை இனங் கண்டு அவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது ஆசிரியர்களின் முக்கிய கடமை ஆகும்.

மேற்கண்டவாறு, வடமராட்சி வலயக் கல்வி அலுவலகமும், அஞ்சலியகமும் இணைந்து ஆசிரியர்களுக்கு ஆரம்பித்துள்ள உளவளத்துறைப் பயிற்சி நெறியின் தொடக்க விழாவிலே பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். சுகாதாரசேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் குறிப்பிட்டார். பருத்தித்துறை தும்பளை அஞ்சலியகத்தில் இடம்பெற்ற இந்த விழா வில் உளவளத்துறை நிபுணர் அருட்திரு. டெமியன் அடிகளார் (கனடா ஒற்றவா பல்கலைக்கழக உளவியல் நிபுணர்) தலைமை தாங்கினார்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா மங்கள விளக் கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். வடமராட்சி வலய உளவளத்துறை ஆசிரியர் ரி. தனேஸ்வரன் வரவேற்புரையை நிகழ்த்தினார்.

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கேதீஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில்:

சுமார் 25 வருடங்களாக நாட்டில் கொடிய யுத்த அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. திடீரெனத் தோன்றிய சுனாமியும் பேரழிவை ஏற்படுத்தி விட்டது. இவைகளினால் பல உயிர்கள் அநியாயமாக பலியாகியுள்ளன. இதனால் மக்கள் பலத்த உளத் தாக்கங்களுக்கு உள அழுத்தங்களுக்கும் உள்ளாகி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களது உளப் பாதிப்புக்களையும் உள அழுத்தங்களையும் இனங் காணுவதற்கு உள வளப்பயிற்சிகளைச் சிறப்பாக மேற்கொண்டவர்களாலேயே முடிகிறது. முக்கியமாக மாணவர்களின் பாதிப்புக்களுக்கு விமோசனம் காண ஆசிரியர்கள் இப்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமானதாகும் -என்றார்.

இந்நிகழ்வில் மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி, வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரமூர்த்தி, அதிபர் எஸ்.சேதுராஜா ஆகியோர் சிறப்பு விருந் தினர்களாக கலந்து கொண்டனர்.

வடமராட்சி வலயத்தில் இப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு 35 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களின் பயிற்சிநெறி சனி, ஞாயிறு தினங்கள் ஒரு வருட காலத்திற்கு நடைபெறும். (218)

## கலாசாரப் பேரவையில் உறுப்புரிமை பெறலாம்

யாழ்ப்பாணம், டிசெ.22

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையில் புதிதாக உறுப்புரிமை பெற விரும்பும் கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலை ஆர்வலர்களை உடன் இணைந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உறுப்புரிமையைப் பெற அல்லது புதுப்பித்துக்கொள்ள விரும்புபவர்கள் தத்தமது பிரதேச செயலக பணிமனைகளுடன் தொடர்பு கொள்ளுமாறும்-

மாவட்ட கலை- கலாசார பேரவையின் பொதுச்சபைக் கூட்டம் விரைவில் நடைபெறவுள்ளது என்றும்- யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மசூதியில் குண்டுவெடிப்பு பாகிஸ்தானில் 50 பேர் பலி!

## ஹஜ் பெருநாளுக்காகக் கூடியிருந்தோர் அல்லோலகல்லோலம்

இஸ்லாமாபாத், டிச.22

பாகிஸ்தானின் வடமேற்கே உள்ள நகரமொன்றில் மசூதியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் சிக்கி 30 வரை பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் ஹஜ் பெருநாளிற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மசூதியில் கூடியிருந்தவேளை தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. தாக்குதல் நடைபெற்றவேளை முன்னாள் உள்துறை அமைச்சர் அவ்டாப் வெர்டோவோ மசூதிக்குள் இருந்துள்ளார். எனினும், அவர் உயிர்தப்பியுள்ளார். அவரது மகன் காயமடைந்துள்ளார்.


தாக்குதலுக்குள்ளான மசூதிப் பகுதி

வெர்டாவோவிற்கு பின்னாலிருந்த இரண்டாவது வரிசையிலேயே குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளது. முன்னாள் அமைச்சரே இலக்குவைக்கப்பட்டார் என பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பின் நெருங்கிய சகாவான அமைச்சர், எட்டு மாதங்களில் இரண்டாவது தடவையாக இலக்குவைக்கப்பட்டுள்ளார். அடுத்தமாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் அவர் போட்டியிடுகின்றார். கடந்த ஏப்ரலில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றிலிருந்து இவர் காயங்களுடன் தப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மியான்மாரில் ஜனநாயகம் திரும்ப ஐ.நா. ஆலோசனைக் குழு அமைப்பு

நியூயோர்க், டிச.22

மியான்மாரில் ஜனநாயகம் திரும்ப இந்திய உட்பட 14 நாடுகளைச் சேர்ந்த குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவை ஐ.நா. பொதுச் செயலர் பான்-கீ-மூன் நியமித்துள்ளார். இக் குழுவுக்கு 'மியான்மாருக்கான ஐ.நா.பொதுச் செயலரின் நண்பர்கள் குழு' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா, ரஷ்யா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர், வியட்நாம், பிரான்ஸ், நோர்வே, தாய்லாந்து, போர்த்துக்கல், இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உறுப்பினர்களுடன் ஐ.நா.பொதுச் செயலர் பான் -கீ-மூன் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தினார். இக்குழுவில் இந்தியா இடம்பெற்றிருந்தபோதிலும் ஆலோசனையின்போது இந்தியப் பிரதிநிதி பங்கேற்கவில்லை.

மியான்மருடன் பேச்சு நடத்தி அங்கு ஜனநாயகம் திரும்ப மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் அண்மையில் மியான்மாருக்கு ஐ.நா. பொதுச் செயலரின் சிறப்புத்தூதராக சென்று திரும்பிய இப்ராஹிம் கம்பாரியும் கலந்து கொண்டார்.

ஐ.நா. பொதுச் செயலரின் சிறப்பு அதிகாரத்தைப் புயன்படுத்தி அங்கு ஜனநாயகம் ஏற்பட மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்குழுவினர் ஆய்வு செய்தனர்.

ஐ.நா.பொதுச் செயலரின் சிறப்புத் தூதர் கம்பாரி, அடுத்த மாதம் மீண்டும் மியான்மார் செல்லவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மியான்மாரின் மதிப்புமிக்க இரத்தினக் கற்கள் (ஜெம்ஸ்) தொழிலுக்கு அமெரிக்கா விதித்திருந்த தடைக்கு அந்நாட்டின் செனட் ஒப்புதல் அளித்துள்ளது.

''மியான்மாருக்கு உதவ அமெரிக்கா எப்போதும் தயாராக உள்ளது. ஆனால், அந்நாடு அமைதியான முறையில் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பவேண்டும்.'' - என வெளிவிவகாரங்களைக் கவனிக்கும் செனட் உறுப்பினர் ஜோசப் பிடென் கருத்துத் தெரிவித்துள்ளார். மியான்மாரில் ஜனநாயகம் திரும்புவதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் அமெரிக்கா கட்டாயம் மேற்கொள்ளும் என்றும் பிடென் தெரிவித்தார். இவர் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுகிறார்.

மியான்மாரில் இராணுவ ஆட்சி நீடித்தால் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் எனக் கடந்தவாரம் அமெரிக்க ஜனாதிபதி புஷ் எச்சரித்திருந்தார் என்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

# சர்வதேச விவகாரங்களில் தன் நலன்களை வல்வந்தமாகத் திணிக்க அமெரிக்கா முயற்சி

## ரஷ்ய ஜனாதிபதி புடின் பாய்ச்சல்

நியூயோர்க், டிச.22

அமெரிக்கா தன் சுயநலன்களின் அடிப்படையில் முடிவு எடுத்து அதை சர்வதேச விவகாரங்களில் வல்வந்தமாகத் திணிக்க முயற்சி செய்கிறது என்று குற்றஞ்சாட்டியுள்ள ரஷ்ய ஜனாதிபதி புடின், அப்படி அமெரிக்கா செய்யும் போது அதற்கு கடும் எதிர்ப்புத்தான் கிளம்பும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச அளவில் பிரபலமான அமெரிக்காவின் 'ரைம்ஸ்' பத்திரிகை, இந்த ஆண்டுக்கான சிறந்த நபராக ரஷ்ய ஜனாதிபதி புடினை தேர்வு செய்துள்ளது. இதையொட்டி, அந்தப் பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே புடின் மேற்கண்டவாறு கூறினார். அவர் அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

''தற்போதைய காலகட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்றால், பேச்சு மூலம் முயற்சி செய்ய வேண்டும். சமரசத்துக்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். சமரசத்துக்கான முயற்சி என்பது, தூதரக அளவிலான தொடர்பாக மட்டும் இருந்து விடக் கூடாது. எதிர்த்தரப்பின் நலன்களுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

''ஈரான் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே, அணுஆயுத உற்பத்தி முயற்சியைக் கைவிட்டு விட்டது என அமெரிக்காவின் சி.ஐ.ஏ. அறிக்கை கூறுகிறது. இராணுவ நடவடிக்கைகளைச் சமாளிக்கும் முயற்சியில் ஈரான் மக்கள் ஈடுபடுவதிலிருந்து திசை திருப்பும் முயற்சியாகவே இதை நான் கருதுகிறேன். ஈரான் மீது போர் தொடுப்பது என்பது சொல்வதற்கும், எழுதுவதற்கும் வேண்டுமானால் எளிதாக இருக்கலாம். ஈரான் மீது போர் தொடுப்பது மிகப்பெரிய அபாயத்தை ஏற்படுத்தும். அத்துடன் மற்றுமொரு மிகப்பெரிய தவறைச் செய்வதாக அமைந்து விடும்.

''பனிப்போரில் உயிரிழந்த, நாற்றமெடுக்கும் பிணங்களைப் போன்று காணப்படுகிறது நேட்டோ அமைப்பு. தற்போதைய பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்கா தலைமையிலான அமைப்பால் முடியாது. 2003ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது மிகப் பெரிய தவறு. ஒரு சிறிய நாட்டை அழிப்பது எளிது. ஆனால், அதனால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை எப்படிச் சமாளிப்பது என்ற விவரம் யாருக்குமே தெரியவில்லை. ஈராக் மக்கள் சிறிய நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கௌரவமானவர்கள். வெளிநாட்டுப் படைகளின் ஆக்கிரமிப்பை அவர்கள் விரும்பவில்லை. இதை, பயங்கரவாதிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஒரு காலத்தில் ஈராக்கில் பயங்கரவாதிகள் கிடையாது. தற்போது அங்கேயும் பயங்கரவாதிகள் தோன்றி விட்டனர்.'' - இவ்வாறு புடின் கூறினார்.

# விஸா வழக்கில் வென்றார் ஹனீப்

மெல்போண், டிச 22

தீவிரவாதிகளுக்கு உதவினார் எனக் குற்றஞ்சாட்டி ஆஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெங்களூரைச் சேர்ந்த டாக்டர் ஹனீப்புக்கு மீண்டும் விஸா அளிக்கும் முடிவை ஆஸ்திரேலிய பெடரல் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

கடந்த ஜூலையில் லண்டன் மற்றும் கிளாஸ்கோவில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட தீவிரவாதிகளுக்கு உதவினாரென ஆஸ்திரேலியாவில் பணிபுரிந்து வந்த இந்திய டாக்டர் முகமது ஹனீப் கைது செய்யப்பட்டார். விசாரணைகளின் பின்னர் ஹனீப் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவரது விஸாவை ரத்துச் செய்து அப்போதைய ஆஸ்திரேலியக் குடியேற்றத்துறை அமைச்சர் கெவின் அன்ட்ரூஸ் உத்தரவிட்டார்.

இது தொடர்பான வழக்கை விசாரித்த பிரிஸ்பேன் நீதிமன்றம் ஹனீப்புக்கு மீண்டும் விஸா அளிக்க உத்தரவிட்டது. இதையடுத்து பிரிஸ்பேன் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து ஆஸ்திரேலிய அரசு பெடரல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. இந்த மனுவை விசாரித்த பெடரல் நீதிமன்றத்தின் முழு ஆணையம் பிரிஸ்பேன் நீதிமன்ற நீதிபதி ஜெப்ரி ஸ்பெண்டரின் உத்தரவை உறுதி செய்து தீர்ப்பளித்தது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு ஹனீப்புக்கு விஸா கிடைப்பதை உறுதி செய்துள்ளதாக அவரது வழக்கறிஞர் பீட்டர் ரோசோ தெரிவித்துள்ளார்.

## உலக அரங்கில்

## கடவுச்சீட்டின்றி நாடுகளுக்குள் பயணம்

# செங்கென் உடன்படிக்கையில் மேலும் 9 ஐரோப்பிய நாடுகள்

பாரீஸ், டிச.22




ஐரோப்பிய ஒன்றியத்துக்குள் கடவுச்சீட்டின்றிப் பயணம் செய்வதற்கு வழிவகுக்கும் செங்கென் உடன்படிக்கையை மேலும் ஒன்பது நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

செக்குடியரசு, எஸ்தோனியா, ஹங்கேரி, லட்வியா, லத்துவேனியா, மோல்ட்டா, போலந்து, ஸ்லோவாக்கியா, ஸ்லோவேனியா ஆகிய நாடுகளே இந்த உடன்படிக்கையை நேற்றுமுன்தினம் அங்கீகரித்துள்ளன. ஜேர்மனியில் பிராங்போர்ட் நகரில் 2000இற்கும் மேற்பட்ட மக்கள் இதனைக் கொண்டாடினர்.

ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்கெல், போலந்துப் பிரதமர் டொனால்ட் உட்பட பல தலைவர்கள் ஜிட்பாவா நகரில் உடன்படிக்கையை ஏற்பதற்காக நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். போல்டிங் கடல் முதல் அட்ரியட்டிக் கடல் வரை ஐரோப்பிய ஒன்றியம் விஸ்தரிக்கப்படுவதை குறிக்கு முகமாக ஆஸ்திரியா, ஸ்லோவாக்கியா எல்லையில் சோதனைச் சாவடிகள் அகற்றப்பட்டுள்ளன.

ஹங்கேரி, ஸ்லோவேனியா உட்பட பல நாடுகளிலும் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. ஆரம்பத்தில் தரை,கடல் பகுதிகளுக்கான கட்டுப்பாடுகளே அகற்றப்படும். 2008 மார்ச்சில் அது விமான நிலையங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இதேவேளை, இதன் காரணமாக குற்றச் செயல்கள் அதிகரிக்கலாம் என ஆஸ்திரியா அச்சம் வெளியிட்டுள்ளது. கடவுச் சீட்டு அவசியமில்லாத அதேவேளை, குறிப்பிட்ட நாடுகளுடன் தொடர்புடைய ஏனைய ஆவணங்களை வைத்திருக்குமாறு மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய பிரஜைகள் அல்லாதவர்கள் செங்கென் விஸா மூலம் அதில் இடம்பெற்றுள்ள அனைத்து நாடுகளுக்கும் செல்லலாம்.

எனினும்,பிரிட்டனும் அயர்லாந்தும் இதில் இடம்பெறவில்லை. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இல்லாத நோர்வேயும் ஐஸ்லாந்தும் இதில் இடம்பெற்றுள்ளன.

செங்கென் உடன்படிக்கையின் கீழ் செங்கென் தகவல் சேவையும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பாரிய தகவல் திரட்டு இடம்பெற்றுள்ளது. குற்றவாளிகளை இனம் காண இது உதவும் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# நீதிமன்றத்தின் முன் தன்னை நிறுத்துமாறு அடுத்த ஜனாதிபதியாகும் யுமா சொல்கிறார்

கேப்டவுண், டிச.22

தென்னாபிரிக்காவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் புதிய தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜகோப் யுமாவிற்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகளை சுமத்துவதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளதாக அந்த நாட்டின் அரச வழக்கறிஞர் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து யுமா தன்னை நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

அரச சட்டத்தரணி மொகொடெடி எம்சே, யுமாவிற்கு எதிரான அடுத்த கட்ட விசாரணை குறித்து புதிய வருடத்தில் அறிவிக்கவுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். தம்மிடம் உள்ள சாட்சியங்கள் அவரை நீதிமன்றம் கொண்டு செல்வதற்குப் போதுமானவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, செய்தியாளர் மாநாடொன்றில் யுமா, தான் பத்திரிகைகளில் விசாரணை செய்யப்படுகின்றார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

''எனக்கெதிராகப் பொதுவிசாரணை இடம்பெறுகின்றது. நான் குற்றம் சாட்டப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. விசாரணைகளை மேற்கொள்பவர்கள் பல விடயங்களைத் தெரிவிக்கிறார்கள். என்னிடம் ஏதாவது கேட்கவேண்டியிருந்தால் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லுங்கள்.'' - எனக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, ஆபிரிக்க தேசிய காங்கிரஸிற்கான தனதுரையில் தற்போதைய ஜனாதிபதிக்கும் தனக்கும் மோதல் உருவாகலாம் என்ற அச்சத்தை யுமா போக்கியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியை தனது 30 வருடகாலத் தோழர், நண்பர், சகோதரர் என வர்ணித்துள்ள யுமா, தோழர்கள் பதவிகளுக்காக போட்டியிடுவதால் அவர்கள் எதிரிகளாக மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

அரசுடனான பல பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுத பேரம் குறித்த விசாரணைகளை இடைநிறுத்துவதற்காகப் பிரான்ஸின் 'தின்ட்' எனும் நிறுவனத்திடமிருந்து இலஞ்சம் பெற்றார் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய விளையாட்டுக்களிலிருந்து மறைந்து போகிறது திகிலூட்டும் மல்யுத்தம்

வீர விளையாட்டுக்களில் ஒன்றாக காணப்பட்ட மல்யுத்தம் இன்று அருகிக் கொண்டு செல்கிறது. இலங்கையில் இந்தப் போட்டிகளுக்குத் தென் பகுதியில் ஆர்வம் காட்டப்படாத போதிலும் யாழ். குடாநாட்டில் முன்னர் இவ் விளையாட்டு பிரபல்யம் பெற்றுக் காணப்பட்டது.

உலக நாடுகளில் மல்யுத்தம் இடம் பெற்று வருகின்றது. இன்று தொலைக் காட்சிகளில் இதன்ன நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.இப்போட்டிகள் மிகவும் விறுவிறுப்பானதகவும் பயங்கரமானதாகவும் அமைந்துள்ளன.

இதனைப் பார்ப்பவர்கள் மல்யுத்தம் என்றால் ஒரு பயங்கரமான விளையாட்டு என்றே எண்ணி வருகின்றார்கள்.

1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த மல்யுத்த விளையாட்டு மிகவும் பிரபல்யமாகவும் ஒழுக்கக் கட்டுப்பாடு மிக்க விளையாட்டாகவும் விளையாடப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டுப் பற்றி 1980 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஈடுபட்டு வந்த மல்யுத்த வீரர் பத்மநாதனை சந்தித்து இப்போட்டிகள் சம்பந்தமாக கலந்துரையாடக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

மானிப்பாய், சுதுமலைப் பகுதியைப் பிறந்த இடமாகக் கொண்ட இவர் தற்போது ஏழாலைப் பகுதியில் வசித்துவருகின்றார். இவர் தனது கடந்தகால நினைவுகளை மிகவும் இனிமையாகக் கூறினார்.

மல்யுத்தப் போட்டிகள் என்பது மதிநுட்பம் மிக்கதும் பொறுமையுடையதும் எனத்தெரிவித்த இவர் இன்றைய காலம் போன்று பணத்தை காட்டி யாரும் பழகிக் கொள்ள முடியும் என்ற நிலைமை அன்று காணப்படவில்லையெனத்தெரிவித்தார்.

இந்த விளையாட்டைப் பயில்வதற்கு அந்த காலத்தில் பல பரீட்சைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. இதனை பயிற்றுவிப்பவரிடம் சென்று பழகவிருப்பம் தெரிவித்தால் அவர் உடனடியாக சம்மதம் தெரிவிக்கமாட்டார். எமது பொறுமையை கடுமையாக சோதிப்பார். அத்துடன் பழக விரும்புபவர் பயிற்றுவிப்பாருடன் பல தடவை சென்று வரவேண்டும். இந்த காலப்பகுதியில் பயிற்றுவிப்பாளர் எமது பழக்கவழக்கம், பொறுமை, ஒழுக்கம் என்பவற்றை எல்லோரும் அறிந்து கொள்வர்.

''சாண்டோ'' என்று பட்டம் பெற்றவர்களே பயிற்சியாளர்கள் இருந்து வந்தார்கள். இவர்களிடம் மல்யுத்தம் கற்கச் சென்றால் முதலில் சத்தியம் பெற்று கொள்வார்கள். அதாவது வித்தையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கெட்ட வழியில் பயன்படுத்த மாட்டோம் எனவும் அடுத்தவருக்கு துன்பம் உண்டாக்க பயன்படுத்தமாட்டோம், கெட்டவர்களுக்கு இதனைப் பழக்கமாட்டோம் என்றும் பழக விரும்புபவர் சத்தியம் செய்ய வேண்டும். அதன் பின்னரே பயிற்சி ஆரம்பிக்கப்படும் என்றார் பத்மநாதன்.

அவர் மேலும் கூறியதாவது:-

எங்களுடைய காலத்தில் வல்வெட் டித்துறையில் புலிக்குட்டி என்று கூறப் படும் ஒருவரும் மேலும் நான்கு, ஐந்து பேரும் இருந்தார்கள். அத்துடன் ஆனைக் கோட்டை பகுதியில் ரைகர்கந்தசாமி, பாசையூர் பகுதியில் அலோசியஸ், செல்வம், சுதுமலை, மனிப்பாய் பகுதிகளில் மயில்வாகனம், இராசு, பூபாலு என்பவர்கள் இந்தக்கலை யில் சிறந்து விளங்கினார்கள்.

இதே போன்று திருநெல்வேலிப் பகுதியில் 'சாண்டோ' இராசையா மாஸ்ரர், 'சாண்டோ' கந்தையா வடமராட்சியில் 'சாண்டோ' துரைரத்தினம் என்பவர்க ளும் இருந்தார்கள். 'சாண்டோ' என்பது பயில்வான் என்பதை வெளிப்படுத்துவ தாகும்.

எங்களுடைய காலத்தில் இந்த மல்யுத்தப் போட்டிகள் என்பது பூட்டுக்கள் போடுவதும் அதனைச் கழற்றுவதுமாகக் காணப்பட்து. இன்றைய போட்டிகளில் இடம்பெறுவது போன்று ரத்தக்களரியாக மல்யுத்தம் இருப்பதில்லை.

அன்று களியாட்ட நிகழ்வுகள் மற்றும் பாடசாலைகள், சனசமூக நிலையங்களின் நிகழ்வுகள் மற்றும் அபிவிருத்தி முயற்சிகளுக்கான நிதி உதவிக் காட்சிகள் என்பவற்றில் இப் போட்டிகள் இடம் பெறுவது வழமையாகும். கோபம் வந்தாலும் கூட எதிர்த்து விளையாடுபவர்கள் மீது காட்ட எவரும் முயற்சிக்க மாட்டார்கள். அந்தளவுக்கு இந்த விளையாட்டை பொறுமையாக விளையாட வேண்டும். குறிப்பாக அன்றைய விளையாட்டு முறையை 'அமெரிக்கன் பிறின்ஸ்ரைல்' எனக் குறிப்பிடுவார்கள். இந்த விளையாட்டானது 65,66 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மக்களிடையே பிரபல்யம் பெற்ற விளையாட்டாகக் காணப்பட்டது. இந்தக்காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த மல்யுத்த வீரர்கள் கொழும்பில் போட்டிகளில் கலந்து கொண்டதுடன் யாழ்ப்பாணத்திற்கும் தெல்லிப்பழைக்கும் போட்டிகளை நடத்தி உள்ளார்கள். இதில் அன்று இந்தியாவில் பிரபல்யம் பெற்ற சர்வதேச போட்டியாளர்களான கிங்கொங், தாராசிங், கோராசிங் போன்ற வீரர்களைக் குறிப்பிடலாம்.

காரணமாக இப்போட்டியை கற்பிக்கவும் கற்கவும் முன்வராத நிலை ஏற்பட்டுள்ளது.

அன்றைய காலத்தில் கிடைத்த உணவு வகைகளைப் போன்று உடலை வளர்த்துக் கொள்ளக்கூடிய உணவு வகைகளைச் சீராக பெற முடியாத நிலைமை பின்னர் ஏற்பட்டமையும் பின்னடைவதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சண்டோ என்று கூறப்படுபவர்கள் யாரும் இன்று இல்லை. மேலும் இப் போட்டிகளில் கலந்து கொண்ட வீரர்களில் பலர் காலமாகி விட்டார்கள். இதனைப் பயிற்றுவிக்கும் ஆற்றல் கொண்டவர்களும் தற்போது யாழ் மாவட்டத்தில் இல்லை என்றே கூறலாம்.

மேலும் இப் போட்டிகளில் பழகிய ஒரு சிலர் இலைமறைகாயாகக் காணப்படலாம். அல்லது அத்தகையவர்களை இனங்காண வேண்டும். அல்லது அவர்களாக முன்வந்தால் தான் இந்த விளையாட்டுக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க முடியும். எனவே இந்த விளையாட்டுக்குப் புத்துயிரைக் கொடுத்து முன்னேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டு ள்ளது. இதில் ஆர்வமுள்ளவர்கள் கூடிய அக்கறை கொண்டு செயற்பட்டாலே அது அது சாத்தியம் - என்றார் பத்மநாதன்.

## அதற்குப் புத்துயிர் கொடுக்க ஆர்வமுள்ளோர் முன் வரவேண்டும்

1980 ஆம் ஆண்டின் பின்னர் இத்தகைய போட்டிகள் யாழ். குடாநாட்டில் இடம் பெறவில்லையென்றே குறிப்பிடலாம். ஆனாலும் கூட 'சாண்டோ' துரைரத்தினத்தின் ஏற்பாட்டில் ஒருசிலர் இப்போட்டியில் வடமராட்சிப்பகுதிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

அதுவும் தொடர்ந்து வளர்ச்சி அடையக் கூடிய வாய்ப்புகள் ஏற்படவில்லை. இப் போட்டியில் கலந்து பயிற்சி பெற்றவர்களும் பயிற்சி வழங்குபவர்க ளும் பலரின் நெருக்கடிகளுக்கு உள்ளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. இதன்

**விண்ணன்**

## வன்னியில் அடை மழை!

### 4ஆயிரத்து 457 குடும்பங்கள் இடம் பெயர்ந்து நிர்க்கதி!!

கிளிநொச்சி, டிசெ. 22

வன்னியில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையினால் நான்காயிரத்து 457 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் பாடசாலைகளிலும் கோவில்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 4ஆயிரத்து 307 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இவைகளில் 800 குடும்பங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு பாதிக்கப்பட்டோருக்கு சமைத்த உணவு தற்காலிகமாக வழங்கப்பட்டு வருகின்றது - என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் வீதிகள் தார் இன்றி கிரவலால் அமைக்கப்பட்டுள்ளன. மழை வெள்ளத்தில் கிரவல்கள் அள்ளிச் செல்லப்பட்டுள்ளதால் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. ஏரிகள் ஒன்றுடன் ஒன்று தொடுத்துள்ளமையால் மக்கள் படகுகள் மூலம் தமது போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 150 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் கண்டாவளைப் பிரதேசத்தைச் சேர்ந்த கல்லாறுப் பகுதியில் உள்ள கல்லாறுக் கிராமத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களும் பரந்தன் பகுதியிலிருந்து 100 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன. இவர்கள் பாடசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார்.

(சி)

### திருவள்ளுவர் மகாசவையின் வருடாந்த மாநாடு நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.22

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 58 ஆவது வருடாந்த மாநாடும், பொதுக்கூட்டமும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00மணி முதல் சுன்னாகம் றோ.க.த.க வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.


அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் ராமகிருஸ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரி யர் செ. பஜீவானந்தம் கலந்து கொள்கிறார். (அ-2)

### சுயதொழில் வாய்ப்புக்கு கடன் உதவி

வலி தென்மேற்கு,டிசெ.22

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம் பண்டத்தரிப்பு அன்னை வேளாங்கன்னி சேமிப்புக் கழக உறுப்பினர்களுக்கு 2 ஆம் கட்டமாக சுயதொழில் முயற்சிக் கடனாக தலா பத்தாயிரம் ரூபாவை வழங்கவுள்ளது. அதேவேளை- பண்டத்தரிப்பு மகளிர். சேமிப்புக் கழக உறுப்பினர்களுக்கு சுயதொழில் கடனான தலா பத்தாயிரம் வீதம் வழங்கப்படவுள்ளது.

கோழிவளர்ப்பு, கால்நடைவளர்ப்பு, தையல் ஆகிய சுயதொழில் முயற்சிகளுக்கே இக் கடனுதவி வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



கோண்டாவில் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை வீசிய மினி சூறாவளியால் பெரும் சேதங்கள் ஏற்பட்டன. பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்து கிடப்பதையும் வீடு ஒன்றின் மேல் பனைமரம் வீழ்ந்து கிடப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்து விட்டு அமைச்சரவையை மாற்றுவதற்கு ஜனாதிபதி முடிவு?

## உள்வீட்டு அதிருப்தியாளர்களை 'கவனிக்கவும்' திட்டம்

கொழும்பு, டிசெ. 22

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் எந்த நேரத்திலும் ஒத்திவைக்கப்படலாம். அதேவேளை, மிகச் சிறிய பெரும்பான்மையுடன் தொங்கிக் கொண்டிருக்கும் நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தும் வகையில் உறுதியான புதிய அமைச்சரவையை உருவாக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

தற்பொழுது நாடாளுமன்றத்தில் பல கூட்டுக் கட்சிகளைச் சேர்ந்த 114 உறுப்பினர்களுடனான சிறு பெரும்பான்மை அரசே இருக்கின்றது. இந்நிலையில் பட்ஜெட் மீதான வாக்கெடுப்பின்போது எதிரணியின் பக்கம் தாவவிருந்தனர் எனக் கூறப்பட்ட பலரின் பெயர்ப் பட்டியல் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாம்.

இரகசியமாக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பல முக்கிய புள்ளிகளின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன என்று தெரிகிறது. இப்புள்ளிகள் எந்த நேரத்திலும் ஜனாதிபதியின் காலை வாரிவிடலாம் என ஜனாதிபதிக்கு மிகவும் நெருங்கியவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். ஜனாதிபதி பலரையும் சந்தேகக் கண் கொண்டே பார்க்கின்றார் எனப் பெயர் குறிப்பிட விரும்பாதசிரேஷ்ட அமைச்சர்ஒருவர்கூறினார்.

2008ஆம் ஆண்டிற்கான முதலாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதியினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் திட்டமிட்டபடி 8 ஆம் திகதி ஆரம்பிக்கப்படமாட்டாது என்றும் கால வரையறையின்றி அது ஒத்திவைக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

### அமைச்சரின் பதில்


இவ்விடயம் தொடர்பாக ஊடக தகவல் துறைகள் அமைச்சர் பிரியதர்ஷன யாப்பாவிடம் கேட்டபோது, நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைப்பதும், அமைச்சரவையை மாற்றி அமைப்பதும் ஜனாதிபதிக்கு உரிய அதிகாரம். அவருக்குத் தேவைப்பட்டால் - அவசியம் ஏற்படின் அதன்படி செய்வார் என அமைச்சர் யாப்பா பிடி கொடுக்காமல் பதில் அளித்தார்.

இதேவேளை, அரசுக்கு முட்டுக் கொடுத்த சில சிறுபான்மைக் கட்சிகள் [illegible] வரவு - செலவுத் திட்டம் வெற்றிபெற முடிந்தது. இதற்குக் கைமாறாக தமக்கு பிரதி அமைச்சர்கள் என்பதை விட முழுமையான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும் என ஜனாதிபதியை நச்சரிக்க ஆரம்பித்து விட்டனர்.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் கரு ஜயசூரிய அணியில் பலர் இப்பொழுது வெளிநாடுகளில் இருக்கின்றனர். அவர் கள் நாடு திரும்பிய பின்னர் இம்மாற்றங்கள் இடம் பெறும் எனவும் நம்பகமான தகவல் கள் கிடைத்துள்ளன. (சி)

## மரண அறிவித்தல்

### சோமு இராமலிங்கம்



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பு,வள்ளிபுனத்தை, வதிவிடமாகவும் கொண்ட சோமு இராமலிங்கம் 19.12.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சேதுலிங்கம்(கனடா), அமரர் யோகலிங்கம், லிங்கேஸ்வரி(ஜேர்மனி), லிங்கநாயகி(சுவிஸ்), பஞ்சலிங்கம் (புதுக்குடியிருப்பு), தியாகலிங்கம் (புதுக்குடியிருப்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மலோஜினி, கோவிந்தராஜ், ராஜசேகரம் (ஆத்தை), றஞ்சினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.12.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் புதுக்குடியிருப்பில் நடைபெற்றதென்பதை அறியத் தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புங்குடுதீவு (69234) சேதுலிங்கம்(கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க் குற்றங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விற்கு இராணுவத்தின் ஆதரவு உள்ளது எனவும் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கருணா எவ்வாறு இராஜதந்திர கடவுச்சீட்டுடன் பிரிட்டனிற்குள் நுழைந்தார் என்பதைத் தெளிவுபடுத்துமாறு பிரிட்டனிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கடந்த செவ்வாய்க்கிழமை கேட்கப்பட்டுள்ளார்.

பிரிட்டனின் வெளிநாட்டு பொதுநலவாய அமைச்சிற்கு அழைக்கப்பட்ட உயர் ஸதானிகரிடம் இது குறித்த விளக்கம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை உயர்ஸ்தானிகரிடம் கருணாவிற்கு எவ்வாறு இராஜதந்திர கடவுச்சீட்டு கிடைத்தது என்பது குறித்து எமது கவலையைத் தெரிவித்தோம் என வெளிவிவகார அலுவலகம் தெரிவித்துள்ளது. உள்துறை அமைச்சும், நீதிப்பிரிவும் பல வழிவகைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றன.

எனினும், சட்டரீதியான விடயங்கள் காரணமாக நாங்கள் கருத்துக் கூற விரும்பவில்லையெனவும் பிரிட்டன் தெரிவித்துள்ளது. (சி)

## குடாநாட்டு மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு குறிப்பிட்ட வங்கிக் கணக்குகளில் பெருந்தொகையான பணத்தை வைப்புச் செய்யும்படி கேட்கப்படுகின்றனர். அழைப்புக் கொடுப்பவரின் தொலைபேசி இலக்கமும், வங்கிக் கணக்கு இலக்கமும் தெரிந்ததே. பாதுகாப்பு படை அதிகாரிகள் சில நடவடிக்கைகளை எடுத்து, சில சம்பவங்களை விசாரணை செய்வது பாராட்டுதற்குரியது. ஒரு சிலர் விசாரணைக்காகவும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதுவும் பாராட்டப்பட வேண்டும்.

இப்படியான வழியில் அச்சுறுத்திப் பணம் பெறுபவர்கள் அரசியல் சார்பான ஆயுதப்படையும், சமூக விரோத சக்திகளும் குடாநாட்டிலுள்ள திகில், அச்சுறுத்தல் சூழ்நிலையைப் பயன்படுத்துபவர்களாக இருக்கக்கூடிய சாத்தியம் உண்டு. கட்டுப்பாடு நிறைந்த பாதுகாப்பு வலயத்தில் யாழ். குடாநாடு ஆளுகை செய்யப்படும்போது இலங்கை அரசு, இப்படியான பயமுறுத்தல்களை உடனடியாக நிறுத்தமுடியும். இது நிறைவேற்றப்படாத பட்சத்தில், யாழ். மக்கள் மேலும் பிரிக்கப்பட்டு, சட்டமின்மைகாணும்வேளை, அதுஇலங்கை அரசிற்கு திக்குத்தடுமாறலை ஏற்படுத்தும்.

கொடுங்கோண்மையான, நீதிக்குப் புறம்பான கொலைகள், ஒவ்வொரு நாளும் நடக்கும்போது யாழ். சமூகத்தை பலவீனப்படுத்துகிறது. உத்தரவாதமுள்ள நிறுவனங்களும், குழுக்களும் கிரமமாக இக்கொலைகளை புள்ளிவிவரமெடுத்து வெளிப்படுத்தியுள்ளன. யாழ்.குடாநாட்டில் இலங்கைப்பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாடு முழுமையாக இருக்கும் வேளையில் இப்படியான கொலைகள், எப்படி நடக்கின்றன என்பதை விளங்கிக்கொள்வது கடினம். துன்பியல் நிறைந்த நிகழ்வுகள் குடாநாட்டில் நடக்கின்றன என்பது தெளிவாகின்றது.

### அரசியல் மன்னிப்பு வழங்க முன்வரவேண்டும்

விடுதலைப் புலிகளுடன் முன்னர் அல்லது தற்போது தொடர்புடையவர்கள் அல்லது தொடர்புள்ளவர்கள் என சந்தேகப்படுபவர்களே அதிகமாகக் கொலை செய்யப்படுகின்றனர் என்று அங்குள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. இது உண்மையாயின் அவர்கள் கைது செய்யப்பட்டு, நடைமுறைச் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அரசியல் மன்னிப்பை வழங்குவதற்கு இலங்கை அரசு ஆலோசிக்க வேண்டும். அரசியல் மன்னிப்பு ஆணைக்குழுவில் யாழ்ப்பாணக் குடிமக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகித்தால், அதன் பிரதிபலன் மிகுந்த நன்மையளிகும், பாதுகாப்புப்படையின் முன்னைய தளபதிகள், அமைதி நிலவ அவர்களிடையே ஒரு குழுவை ஆரம்பித்துள்ளனர். அவர்களும் இந்த ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கலாம். கூருணர்வுத் திறனுடனும், தரிசனத்துடனும் இவ்வகையான அரசியல் மன்னிப்பு ஆணைக்குழுவை திட்டமிட்டால் அரசியல் கொலைகளுக்கு மாறாக நாகரிகமான விருப்பத்தேர்வும் உண்டாகும். நீதிவானுக்கு முன் சரணடைந்து ஏற்கனவே நிரம்பி வழியும் யாழ். சிறைச்சாலைக்கும் அவசியம் ஏற்படாது.

### தமிழர்கள் இனச் சமூகமாக தண்டிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்

விடுதலைப் புலிகளின் தவறுகளுக்காக தமிழர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென, அதிகாரத்திலுள்ள சில சக்திகள் நம்புவதாக சமீபத்தில் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். ஓர் இனச் சமூகமாக தமிழர்கள் மேல் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களும், தண்டனைகளும் எமது பொதுவான மனித நேயத்தின் பேரிலும் கடவுளின் பெயரிலும் நிறுத்தப்பட வேண்டும்.

மக்களும், தலைவர்களும், வன்முறை மற்றும் அடக்கு முறைகளினால் சோர்வுற்று, நெருக்கடி, நேருக்கு நேர் மோதல் முதலியவற்றிலிருந்து முற்றாகத் திரும்பும் காலம் எதிர்கொள்ளும் வேளை உருவாகும்.

யாழ். பிரதேச மக்கள் வழமை நிலைக்குத் திரும்பி, சாதாரண வாழ்க்கையை வாழவேண்டிய காலத்திற்கு எவ்வளவோ காலம் பொறுமையாகக் காத்திருந்தார்கள். தற்போதுள்ள நம்பிக்கையற்ற சூழ்நிலையை மாற்றி, யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து இலங்கைக் குடிமக்களின் உரிமைகள், பாதுகாப்பு, நலன்கள் யாவையும் இலங்கை அரசு உறுதிப்படுத்தும் செயல் நோக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

இவை, குடிமக்கள் ஆளுமை உள்ளமைப்புகள், வியாபாரம், கைத்தொழில், விவசாயம், மீன்பிடித்தல் இவைகளின் அபிவிருத்தியிலும், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து ஆகியவையின் நலன்புரித் திட்டங்களிலும் தங்கியுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறையில் இருக்கும் அதே வேளையில், தொல்லைக்குள்ளாக்கப்படல் இடர்பாடுகள் முதலியன, அச்சுறுத்தல்கள் யாவும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

CB Computer Academy
:-Station Road, Kondavil. :-021-4590291
G.C.E(O/L) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
இலவசக் கணனிக் கருத்தரங்கு
காலம்: 25.12.2007 (Tuesday) கிறிஸ்மஸ் தினம் காலை 9:30
இடம்: C.B Computer Academy விரிவுரை மண்டபம்.
பதிவுகளை 24.12.07 க்கு முன்னர் மேற்கொள்ளவும் விரும்பத்தக்கது.

## திங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வருகின்றது.

நத்தார் தினத்தை ஒட்டி தேவாலயங்களில் நடைபெறும் இரவு பூசைகள் மற்றும் ஆராதனைகளில் மக்கள் பங்குபற்ற வசதியாக ஊரடங்கு நீக்கப்படுவதாகப் பாது காப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது. (அ-1)

## சரணடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் செயலரின் தடுப்புக்காவல் உத்தரவு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் விசாரணைக்கு அழைத்துச் செல்ல அனுமதிக்க முடியும் என நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலரின் தடுப்புக்காவல் உத்தரவு நேற்று சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அவரை விசாரணைக்கு அழைத்துச் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (அ-1)

## பொதுமக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 11ஆம் திகதியன்று 19, 20 வயதுள்ள இருவர் மற்றும் 17 வயதுச் சிறுவன் ஒருவனையும் துணை இராணுவக் குழுவினர் கடத்திச் சென்றனர். அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்து மோட்டார் சைக்கிளில் ரோந்துப் பணியில் ஈடுபடச் செய்கின்றனர்.

அதேபோல் டிசம்பர் 11ஆம் திகதி, 18 வயது இளைஞர் அம்பாறை தாண்டியடியில் கடத்தப்பட்டார். அவரை கருணா குழுவினரே கடத்திச் சென்றுள்ளனர்.

கடந்த சில வாரங்களில் மொத்தம் 11 பொதுமக்களை ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர். லண்டனில் கருணாகைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கில் பிள்ளையான் குழுவுக்கும் கருணா குழுவுக்கும் இடையே மோதலும் அதிகரித்துள்ளது.

வடக்கில் மேலதிகமான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் ஆணையத்தின் மூலமாக சரணடையும் பொதுமக்கள் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கடத்தல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்ந்தும் யாழில் நடைபெறுகின்றன - என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## குடாநாட்டில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தினம் நகரிலும் வீதிகளிலும் சன நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

வெள்ளத்தால் பாதிப்புற்ற பகுதிகளில் தொண்டு நிறுவனங்கள் நிவாரணப்பணிகளை முன்னெடுத்து வருகின்றன. சுகாதாரப் பணியாளர்களும் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-02)

## வழக்கம்பரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே அழைத்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்பட்டது.

காயமடைந்த நிலையில் சங்கானை வைத் திசாலைக்க எடுத்துச் செல்லப்பட்ட அவர், பின்னர் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப் படும் வழியில் உயிரிழந்தாகத் தெரிவிக்கப் பட்டது.

2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர் தலில் ஐ.தே.கட்சி வேட்பாளராக வட்டுக் கோட்டைத் தொகுதியில் அவர் போட்டியிட் டிருந்தார்.

CATWAS.COM
Computer Academy
# 26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
Tel: 021 2223805
E-Mail: catwasomi@Slnet.lk
இதோ! O/L மாணவர்களுக்கான
புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.
இவர்களுக்கான பிரிவுகள் அனைத்தும்
வார நாள் மற்றும் வார இறுதி
நாட்களுக்கான பிரிவுகளாக ஆரம்பிக்கப்படும்.
Ms Office
DTP
Hardware
Kids Program
விரிவுரைகள் Multimedia மூலம் நடைபெறும்
வரையறையற்ற செய்முறைப் பயிற்சி
ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
தனிப்பட்ட வகுப்புகளுக்கான அனுமதிகள்

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
2010 A/L கணித, உயிரியல் மாணவர்களுக்கான
பாட நெறிகள், பாடவிதானம் சம்பந்தமான
அறிமுகக் கருத்தரங்கு
22.12.2007 சனி - 2:30 p.m
23.12.2007 ஞாயிறு - 8:00 a.m
இலவசம்

O/L தோற்றியவர்களுக்கான கணனிக்கல்வி
# MsOffice-Internet/ Email-Hardware-FlashMx
# Photoshop-Coreldraw-Pagemaker-HTML
# VB. Net-ASP.Net-PHP/Mysql-GNU/Linux
R.Kumaran-B.SC. Contact No: 0776577359
செருக்கப்புலம் லேன், பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.

## மாகாண மட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட முன்னேற்றகரமானதாகக் காணப்படும் அடுத்த இரண்டு மூன்று வாரங்களில் இது வெளியாகும்.

இலங்கையின் 60 ஆவது சுதந்திரக் கொண்டாட்டங்களுக்காக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் விஜயம் மேற்கொள்வதற்கு முன்னர் புதிய யோசனைகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்.

### நிரந்தரத் தீர்வு தற்போது சாத்தியமில்லை

பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நிகழ்வுகளுக்காக மன்மோகன்சிங்கிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும் இந்த அழைப்பு இன்னமும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

நிரந்தர அரசியல் தீர்வென்பது தற்போதைக்கு சாத்தியமில்லை. ஏற்கனவேயுள்ள கட்டமைப்பிலேயே உருவாக்குவது சிறந்தது. முற்றுமுழுதான் புதிய கண்ணிற்கு தென்படாத அரசமைப்பைத் தேடுவதை விட படிப்படியாகச் செல்வது நல்லது என ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளோம்.

புதிய அரசமைப்பு எதனையும் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம்.

மாகாண சபைகள் சட்டத்தில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை அதிகரிப்பதை மாத்திரம் செய்தால் போதும்.

ஐக்கிய தேசியக் கட்சியே 13 ஆவது அரசமைப்பு மாற்றத்தினைக் கொண்டு வந்ததால் அதனை ஏற்றுக்கொள்வதில் அதற்குப் பிரச்சினையிருக்காது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களுடனும் பேச்சுகளை மேற்கொண்டேன். ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்றவை முன்னர் அதனை எதிர்த்தபோதும் தற்போது அது தொடர வேண்டும் என விரும்புகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு முதலமைச்சராகும் தகுதி எனக்கு உண்டு - என்றார். மேலும்-

"விடுதலைப் புலிகளின் தலைவருடன் பேச்சுகளை மேற்கொள்வது தவறு. அவர் கொல்லப்பட்டாலொழிய சமாதானத்திற்கு வாய்ப்பில்லை,

பிரபாகரன் - பொல்பொட், ஹிட்லருடன் ஒப்பிடப்பட வேண்டியவர். அவர் உயிருடன் உள்ளவரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எவரையும் அனுமதிக்க மாட்டார். ஜனாதிபதி மீண்டும் பேச்சுக்குச் சென்றார் என்றால் அது பெரும் தவறாக அமையும்." - எனவும் அவர் கூறினார். (அ-சி)

## அமைச்சர் யாப்பாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதியன்று யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்டார். பொதுசன ஊடக அமைச்சர் கூறிய ஒரே ஊடகவியலாளர் அவராக இருக்கலாம். அவரிடமும் 2007ஆம் வருடத்திற்கான தகவல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையொன்று இருந்திருக்கும் என நினைக்க முடியாது. அவ்வாறு இருக்காதுவிட்டால் அவரும் பொதுசன ஊடகவியலாளரொருவராக மரணிக்கவில்லை.

அச்சு, இலத்திரனியல் அல்லது இணையத்தள ஊடகங்களுடாகத் தொழிலாகத் தகவல்களைச் சேகரிக்கையில், பதிப்புச் செய்கையில் மற்றும் விநியோகிக்கையில் ஒன்றுசேர்ந்தோ அல்லது தனியாகவோ ஈடுபட்டிருக்கும் எந்த ஒருவரும் பொதுசன ஊடகவியலாளரே. அதுமாத்திரமல்லாது, ஏனையோரும் பார்த்து வாசிக்கக் கூடிய வகையில் இணையத்தளத்தில் தனது சமூக அரசியல் நாட்குறிப்பு எழுதுபவர்களும் அமைச்சரின் வரைவிலக்கணத்துக்கு உட்படாத ஊடகவியலாளர்களே ஆவர். ஜனநாயக சமூகத்தில் ஊடகவியலாளர் தொடர்பாக அர்த்தப்படுவது அவ்வண்ணமே.

2007 பெப்ரவரி 15ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் இராணுவ சோதனைச் சாவடியொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டதன் பின்னர் ஊடகவியலாளர் சுப்பிரமணியம் இராமச்சந்திரன் காணாமல் போயுள்ளார். இதுவரை அவர் தொடர்பாக எவ்வித தகவலும் இல்லை. அவர் யாழ். தினக்குரல் மற்றும் வலம்புரி பத்திரிகைகளின் வடமராட்சி நிருபராகப் பணியாற்றியவர். அமைச்சர் கேட்கும் அடையாள அட்டை அவரிடமும் இருக்கவில்லை.

2007 ஏப்ரல் 16ஆம் திகதியன்று கொலைசெய்யப்பட்ட சுபாஸ் சந்திரபோஸ், நிலாம் என்ற பெயரில் சிறிய சஞ்சிகையொன்றை எழுதிப் பிரசுரித்து வந்ததுடன், வவுனியாவில் தமிழ் பத்திரிகைகளை விநியோகிப்பதிலும் ஈடுபட்டிருந்தார். லண்டனில் பிரசுரமாகும் 'ரமில் வேல்ட்' சஞ்சிகைக்குக் கட்டுரைகளை வழங்கிவந்தார். அவருக்கு நீண்ட கால சுதந்திர ஊடக வரலாறும் இருந்தது. சிறிய அச்சகமொன்றை யும் நடத்தி வந்தார் ஆனால் அமைச்சர் கேட்ட அடையாள அட்டை அவரிடமும் இருக்கவில்லை.

2007 ஒகஸ்ட் முதலாம் திகதியன்று கொலை செய்யப்பட்ட சகாதேவன் நிலக்ஷன் ஊடக மாணவராகவும் நிருபராகவும் இருந்தார். 'சாளரம்' எனும் பெயரிலான சஞ்சிகையொன்றையும் நடத்தி வந்தார். அமைச்சர் கேட்கும் அடையாள அட்டை அவரிடமும் இருக்கவில்லை.

## மரண அறிவித்தல்

### இராசையா செல்லம்மா



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசையா செல்லம்மா அவர்கள் நேற்று (21.12.2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்-அன்னம்மா தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சுப்பிரமணியம், பாக்கியம், சபாரத்தினம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிற்றம்பலம் இராசையாவின் மனைவியும், பராசக்தி, அன்னலிங்கம் (S.R), தவமணி, மகாலிங்கம், காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் ஜெயராசலிங்கம், புனி தவதி, காலஞ் சென்ற கமலாதேவி ஆகியோரின் மாமியாரும், ஞானாம் பிகை, காலஞ்சென்ற கலைவாணி, ஞானசூரியர் (U.K), ஞானசம்பந்தன் (சுவிஸ்), ஞானசொரூபன், ஞானக்குமார், காலஞ்சென்ற ஞானேஸ்வரன் மற்றும் ஞானேந்திரன், ஞானக் கலை, ஞானேஸ்வரி, லலிதா, தற்பரன், லாவணியா, லக்சினி (கனடா) ஆகியோரின் பேத்தியாரும், நிசானி, நிலானி, சமந்தா, றக்சன், விதுஷன், நிரோஜா, உமாசங்கரி, சிவசங்கரி, பிரம்மியா, அருசன் ஆகியோரின் பூட்டி யுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.12.2007) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(69235)

தகவல்:
பிள்ளைகள்
பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெ [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org